பக்கங்கள்:-27

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | மார்கழி 25 | புதன்கிழமை | 10.01.2024 | அதிர்வு 162

**பிரபல ஹோட்டல் அறையிலிருந்து**

## அமெரிக்கப் பிரஜை சடலமாக நேற்று மீட்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

களுத்துறையில் பிரபல ஹோட்டல் ஒன்றின் அறையிலிருந்து அமெரிக்கப் பிரஜை ஒருவர் நேற்று சடலமாக மீட்கப் பட்டுள்ளார். 06



# தமிழரசுத் தலைவருக்குப் போட்டியா? வேண்டாம் என்கின்றாராம் சம்பந்தன்

## சிறிதரனிடம் அவரே நேரில் கூறினாராம்

(சீ.ஏ.தமிழ்மாறன்)

“இலங்கைத் தமிழரசுக் கட்சியில் போட்டி இல்லாத தலைவர் தெரிவும், சகல உறுப்பினர்களும் ஒற்றுமையுடன் சேர்ந்த மாநாடும் நடைபெற வேண்டும். கடந்த காலங்களில் தமிழரசுக் கட்சி எவ்வாறு பலமாக இருந்ததோ அதே போன்ற நிலைமை தொடர வேண்டும். நாம் தொடர்ந்தும் பலத்துடன் இருக்க வேண்டும். கட்சிக்குள் போட்டிகள் வந்தால் அது கட்சியையும், உறுப்பினர்களையும் பலவீனப் படுத்தும்.”

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பெருந்தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் நேற்றுத் தம்மிடம் தெரிவித்தார் என்று சிறிதரன் எம்.பி. தகவல் வெளியிட்டார். 06

## உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலையின் நினைவேந்தல்

**இன்று யாழ். முற்றவெளி நினைவாலயத்தில்**



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் படுகொலை செய்யப்பட்டவர்களின் 50 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு இன்று நடைபெறவுள்ளது.

யாழ். முற்றவெளியில் 06



இடது பக்கம் திரும்புவதாக சிக்னல் போட்டு விட்டு, திடீரென வலது பக்கம் திரும்புவது என் பார்களே... அத்தகைய திட்டம் ஒன்றுடன்தான் மாவை – சம்பந்தன் இணை இன்று நடைபெறும் தமிழரசுக் கட்சியின் அரசியல் குழு கூட்டத்திற்கு தயாராகியிருப்பதாகத் தெரிகின்றது.

நான் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் தோற்றுவிடுவார் என்றுதான் அண்மையில் குறிப்பிட்டிருந்தேன். சிவாஜிக்கு 06

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம் - Bonding Tamils Globally

# தேசிய நல்லிணக்கத்துக்கான அலுவலக சட்டமூலத்தின் பின்னால் பெரும் சூழ்ச்சி

## சரத் வீரசேகர எம்.பி. கூறுகிறார்



**"தேசிய ஒற்றுமையை, நல்லிணக்கத்தை ஸ்தாபிக்க அரசாங்கம் ஏற்றுக்கொண்ட விடயங்களை செயற்படுத்த வேண்டும் என சட்டமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அலுவலகத்தை ஸ்தாபித்ததன் பின்னர் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்த வேண்டும் என்று குறிப்பிட்டால் அதனையும் செய்ய வேண்டும். ஆகவே நாட்டின் ஒற்றையாட்சிக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் தாக்கம் செலுத்தும் எதற்கும் ஆதரவு வழங்க முடியாது."**

**- இவ்வாறு பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்தார்.**

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற தேசிய ஒற்றுமைக்கும்,நல்லிணக்கத்துக்குமான அலுவலகம், தேசிய நீரளவை சட்டமூலம் என்பன மீதான விவாதத்தின் போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

"உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு ஸ்தாபிக்கப்படவுள்ளது. இந்த ஆணைக்குழு ஊடாக இராணுவத்தினருக்கு எதிராக சாட்சியம் திரட்ட முடியும். யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்த இராணுவ அதிகாரிகள் இன்று தண்டிக்கப்பட்டுள்ளார்கள். அவர்களுக்கு சர்வதேச மட்டத்தில் தடை விதிக்கப்பட்டுள்ளது. இதற்கு நாடாளுமன்றத்தின் ஊடாக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

சமர்ப்பிக்கப்பட்டுள்ளதேசியஒற்றுமைக்கும்நல்லிணக்கத்துக்குமான சட்டமூலத்தில் தேசிய நல்லிணக்கத்தை ஸ்தாபிப்பதற்கு உருவாக்கப்பட்ட அரச கொள்கைகளை செயற்படுத்த வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்த வேண்டும் என்று குறிப்பிட்டால் இந்த அலுவலகத்தின் ஊடாக அதனையும் செயற்படுத்த வேண்டும். 29 ஆயிரம் இராணுவத்தினர் இதற்காகவே உயிர் நீத்தார்கள்?

தேசிய ஒற்றுமைக்கும், நல்லிணக்கத்துக்குமான அலுவலகத்தை ஸ்தாபிக்கும் சட்டமூலம் சூழ்ச்சி நிறைந்தது. எதிர்காலத்தில் இராணுவத்தினருக்கு மறைமுகமாக பாதிப்பை ஏற்படுத்தும். ஆகவே இந்த சட்டமூலத்துக்கு நான் எதிர்ப்பு தெரிவிப்பேன்." – என்றார்.

# செப்டெம்பர் ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க

## ஐ.தே.கவின் முகாமைத்துவக் குழு தீர்மானம்



அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் தேசிய வேட்பாளராக ரணில் விக்கிரமசிங்கவைக் களமிறக்குவதற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் முகாமைத்துவக் குழு நேற்று தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் செப்டெம்பர் மாதம் ஜனாதிபதித் தேர்தலையும், அதன் பின்னர் பொதுத் தேர்தலையும் நடத்த வேண்டும் எனவும் மேற்படி கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் பிரதித் தலைவர் ருவான் விஜேவர்தன, தவிசாளர் வஜிர அபேவர்த்தன உட்பட கட்சியின் முக்கியஸ்தர்கள் பங்கேற்றுள்ளனர்.

# இன்று மலையகத் தியாகிகள் தினம்

## பல இடங்களில் நிகழ்வுகள்

மலையக மக்களின் அரசியல், தொழில் உரிமைகளுக்காக உயிர்நீத்த மலையகத் தியாதிகளை நினைவுகூரும் "மலையகத் தியாகதிகள் தினம் இன்று அனுஷ்டிக்கப்படுகின்றது.

இதன் பிரதான நினைவேந்தல் நிகழ்வு கொட்டகலை கொமர்சல் லேக்கில் பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மலையகத் தமிழர்களுக்கான தொழில்சார் மற்றும் இதர உரிமைகளை வென்றெடுப்பதற்கான உரிமைப் போராட்டத்தில் உயிர்நீத்த அனைத்து தியாகிகளையும் நினைவுகூர்ந்து பொதுச்சுடர் ஏற்றப்பட்ட பின்னர் நிகழ்வின் ஏனைய அம்சங்கள் நடைபெறும்.

1930 இற்குப் பிற்பட்ட காலங்களில் ஆரம்பிக்கப்பட்ட தொழிற்சங்கங்களால் முன்னெடுக்கப்பட்ட தொழிற்சங்க அரசியல் உரிமைப் போராட்டங்களில் பங்குபற்றி உயிர்நீத்த அனைத்து தோட்டத் தொழிலாளர்களையும் மலையகத் தியாகிகள் என அடையாளம் காண்கின்றோம்.

இந்த நினைவேந்தல் நிகழ்வில் பங்குகொண்டு எமக்காகத் தமது இன்னுயிரைத் தியாகம் செய்தவர்களை நினைவுகூர அனைவரும் வருகை தர வேண்டும் என்று பிடிதளராதே




அமைப்பினர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

மலையக மண்ணின் முதல் தியாகியான முல்லோயா கோவிந்த உயிரிழந்த ஜனவரி 10 ஆம் திகதியே மலையகத் தியாகிகளுக்காக தினமாக நினைவு கூரப்பட்டு வருகின்றது.

அதேவேளை, யாழ். பல்கலைக்கழகத்திலும் நினைவேந்தல் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.



# அம்பாறை மாவட்டத்தின் இலக்கிய விருது விழா அட்டாளைச்சேனையில் நேற்றுக் கோலாகலம்







**(நூருல் ஹுதா உமர், எம்.எப்.றிபாஸ்)**

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணை மற்றும் வழிகாட்டலில் அம்பாறை மாவட்ட செயலகம் தமிழ் மொழிமூல 13 பிரதேச செயலகங்களுடன் இணைந்து ஏற்பாடு செய்த அம்பாறை மாவட்ட இலக்கிய விருது வழங்கும் விழா – 2023 மற்றும் சான்றிதழ் மற்றும் பரிசில்கள் வழங்கும் விழா மாவட்ட கலாச்சார உத்தியோகத்தர் ரீ.எம். ரிம்ஸானின் நெறிப்படுத்தலில் அட்டாளைச் சேனை பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.ஏ. சாபீர் தலைமையில் அட்டாளைச்சேனை தனியார் மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக்க அபேவிக்கிரம கலந்து சிறப்பித்தார். கௌரவ அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வீ. ஜெகதீசன் கலந்து கொண்டார். விசேட அதிதிகளாக மட்டக்களப்பு மாவட்ட நீதிவான் எம்.எச்.எம். ஹம்ஸா, சம்மாந்துறை நீதிபதி டி.கருணாகரன், காரைதீவு பிரதேச செயலாளர் எஸ். ஜெகராஜன், சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம். ஹனிபா, நாவிதன்வெளி பிரதேச செயலாளர் ஆர். ராகுலநாயகி, அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் ரீ.எம். அன்ஸார், இறக்காமம் உதவி பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.ஏ. நஸீல், சாய்ந்தமருது உதவி பிரதேச செயலாளர் எம்.ஐ. முஆபிக்கா, அம்பாறை மாவட்ட உதவி செயலாளர் டபிள்யூ.வி.செனவிரத்ன, கிழக்கின் கேடயம் பிரதானி எஸ்.எம். சபீஸ், பிரதேச செயலகங்களின் கலாச்சார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கல்விமான்கள், சிரேஷ்ட கலைஞர்கள், அரச அதிகாரிகள், மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

தமிழ், முஸ்லிம் மக்களின் கலாச்சாரங்கள் பிரதிபலிக்கும் கலை, இலக்கிய நிகழ்வுகள் எல்லோரையும் கவரும் வகையில் இங்கு அரங்கேற்றப்பட்டன. அம்பாறை மாவட்டத்தில் கலாச்சார நிகழ்வுகளில் வெற்றி பெற்ற மாணவர்கள், கலைஞர்கள் சான்றிதழ்கள், பரிசில்கள் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர். இந்நிகழ்வில் சுவதம் விருதுகளும் வழங்கி கௌரவிக்கப்பட்டது.











# வங்காள விரிகுடாவில் காற்றுச் சுழற்சி; அதனால் இலங்கையில் மழை தொடரும்



வங்காள விரிகுடா கடல் பிராந்தியத்தில் காணப்பட்ட காற்றுச் சுழற்சியானது தற்போது இலங்கையின் தெற்காக மையம் கொண்டுள்ளது.

இது மாலைதீவு கடற் பிராந்தியம் நோக்கி மேற்கு திசையில் நகர்வதன் காரணத்தினால் இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் இன்று மழை பெய்யும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நாட்டின் பல பகுதிகளில் 100 மில்லிமீற்றருக்கும் அதிக மழைவீழ்ச்சி பதிவாகக் கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

வடக்கு, கிழக்கு மற்றும் மத்திய மாகாணங்களிலும் பொலன்னறுவை, அம்பாந்தோட்டை மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களிலும் 100 மில்லிமீற்றர் வரையான மழைவீழ்ச்சி பதிவாகக் கூடிய சாத்தியம் நிலவுகிறது.

இதேவேளை, நாட்டிலுள்ள 10 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் விடுத்துள்ள புதுப்பிக்கப்பட்ட அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி, பதுளை, மொனராகலை, கண்டி, மாத்தறை, இரத்தினபுரி, கேகாலை, களுத்துறை, கம்பஹா, காலி மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்களுக்கு இவ்வாறு மண்சரிவு அபாய முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சீரற்ற காலநிலை காரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தின் சின்ன ஊறணி, இருதயபுரம், கருவப்பங்கேணி, கூழாவடி, மாமாங்கம், கல்லடி, வேலூர், நாவற்குடா உட்பட்ட பகுதிகளில் பல வீடுகள் வெள்ள நீரில் மூழ்கியுள்ளன.

அத்துடன், மட்டக்களப்பு மாவட்டத்தின் சில வீதிகள் ஊடான போக்குவரத்து பாதிப்படைந்துள்ளது.

கிரான் பாலத்துக்கு மேலாக வெள்ளநீர் ஓடுவதால் கிரான் – புலிபாய்ந்தகல் வீதியூடான போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. அந்த பகுதியில் படகு சேவை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், வாகரைக்கும் கல்லரிப்பு பிரதேசத்துக்குமான போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ளது.



## நெற்பயிர்ச்செய்கை துறையில் பங்களிப்பு செய்யவுள்ள சீனா!

அதிக விளைச்சலுடன் கூடிய நெற்பயிர்ச் செய்கையை மேம்படுத்துவதற்காக இலங்கையுடன் தனது நிபுணத்துவத்தை பகிரவுள்ளதாக சீனா தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று பிரதமர் தினேஷ் குணவர்தனவைச் சந்தித்த போதே இலங்கைக்கான சீனத் தூதுவர் லீ கியாங் இதனைத் தெரிவித்தார் எனப் பிரதமர் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பான நடவடிக்கைகளை எதிர்வரும் சிறுபோக பருவத்தில் ஆரம்பிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

விவசாயத்துறையை நவீனமயமாக்கும் இலங்கையின் முயற்சிகளுக்கு சீன அரசாங்கம் தொடர்ந்து ஆதரவளிக்கும் எனவும் சீனத் தூதுவர் குறிப்பிட்டுள்ளார் எனப் பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

## வீதிகளைப் புனரமைக்க அமைச்சரவை அனுமதி!



வீதி புனரமைப்பு வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

ஒரு லட்சம் கிலோ மீற்றர் வீதி புனரமைப்பு திட்டத்தின் கீழ், தற்போது புனரமைப்பு பணிகள் பிற்போடப்பட்டுள்ள வீதிகளில் இந்த ஆண்டில் 15 ஆயிரம் கிலோ மீற்றர் வீதிகளைப் போக்குவரத்துக்கு ஏற்ற வகையில் மேம்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கான முழுமையான செலவு இரண்டாயிரம் கோடி ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்த ஆண்டில், 6 மாதங்களில் மேற்படி பணிகளைப் பூர்த்திசெய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதன்படி, ஆண்டின் முதல் 6 மாதங்களில், தெரிவு செய்யப்பட்டுள்ள வீதிகளை போக்குவரத்துக்கு ஏற்புடைய வகையில் புனரமைப்பதற்கான வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

# நாட்டிற்குத் தேவையான பாலை முழுமையாக உள்நாட்டிலேயே உற்பத்தி செய்ய நடவடிக்கை

## இராஜாங்க அமைச்சர் டீ.பி. ஹேரத் தெரிவிப்பு



**"நாட்டிற்குத் தேவையான பால் உற்பத்திக்காகச் சிறிய மற்றும் நடுத்தர பண்ணையாளர்களை வலுப்படுத்துவதற்கு விவசாயத் திணைக்களம் தற்போது நடவடிக்கை எடுத்து வருகிறது. தற்போதுள்ள 06 பால் உற்பத்தி நிலையங்களுக்கு மேலதிகமாக மேலும் 02 உற்பத்தி நிலையங்களைத் திறப்பதற்கு அவசியமான பேச்சுக்கள் பிரான்ஸ் அரசாங்கத்துடன் நடத்தப்பட்டுள்ளன."**

**- இவ்வாறு கால்நடை வளங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் டீ.பி. ஹேரத் தெரிவித்தார்.**

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாட்டிற்குத் தேவையான பால் உற்பத்தியில் நாம் இன்னும் தன்னிறைவு அடையவில்லை. தேசிய தேவையில் 40 வீதம் மாத்திரமே உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகிறது. எஞ்சிய 60 வீத இறக்குமதி செய்வதற்கு 34 பில்லியன் ரூபாவுக்கு மேல் செலவிட வேண்டியுள்ளது.

தற்போதைய நிலையில் பால் உற்பத்திக்கு சிறிய மற்றும் நடுத்தர பண்ணையாளர்களை வலுப்படுத்த விவசாய திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

மேலும், வாரியபொல, வென்னப்புவ, அத்தனகல்ல, கொழும்பு மற்றும் பொலன்னறுவை ஆகிய இடங்களில் பிரான்ஸ் நாட்டின் ஆதரவுடன் 06 பால் உற்பத்தி நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி பிரதேசங்களில் இவ்வாறான தொழிற்சாலைகளை ஆரம்பிக்க உதவுமாறு பிரான்ஸ் அரசாங்கத்திற்கு எமது அமைச்சு பரிந்துரைத்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இந்த ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில் 25 கோடி ரூபாவை பால் உற்பத்தி மற்றும் மேம்பாட்டுக்காக ஒதுக்கியுள்ளார்.

மேலும், வெளிநாடுகளில் இருந்து கொண்டு வரப்படும் கால்நடை தீவனத்தை வரிச்சலுகையுடன் பண்ணையாளர்களுக்கு நியாயமான விலையில் வழங்க கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்திற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது." – என்றார்.

# தற்காலிகமாக மூடப்பட்ட தூதரகங்களை மீளத் திறப்பதற்கு அமைச்சரவை அனுமதி



கடந்த 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகள் காலப்பகுதியில் தற்காலிகமாக மூடப்பட்ட இலங்கைத் தூதரகங்களை மீண்டும் திறப்பதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி, சைப்பிரஸ் , நிக்கோசியாவில் உள்ள இலங்கையின் துணைத் தூதரகம், ஈராக், பாக்தாத்தில் உள்ள இலங்கை தூதரகம் மற்றும் ஜேர்மனியின் பிராங்பேர்ட்டில் உள்ள இலங்கைத் துணைத் தூதரகம் ஆகியவற்றை மீண்டும் திறப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேற்படிதூதரகங்களைமீளத்திறப்பதுதொடர்பாகவெளிவிவகார அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.



## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நடிப்பில் மட்டும்தான் திறமை. நமது தமிழரசுத் தலைவரோ பதவிக் கதிரையில் நீடிப்பதற்கு நடிப்பு மாத்திரமன்றி கதை, திரைக்கதை, வசனம், பாடல், இசை எல்லாம் என்று பல துறைகளில் காய் நகர்த்துகிறார் என்பது இப்போது உள் வீட்டுத் தகவல்.

வயது போய், தளர்ந்திருப்பவர் என்று நாம் கருதிய சம்பந்தனைக் கூடத் தன் திட்டப்படியான நடிப்புக்கு இழுத்து வந்திருப்பதால் தமிழரசுத் தலைவர் இப்போது சிறந்த இயக்குநராகவும் மாறிவிட்டார்.

"தமிழரசுக் கட்சியில் தலைவர் தெரிவுக்குத் தேர்தலா? அது கூடாது. கட்சி உடைந்து விடும்." – என்றெல்லாம் சம்பந்தன் இப்போது கயிறு விடுகிறார் என செய்திகள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன. எல்லாம் சுத்த ஹம்பக். நடிப்பு. மகா நடிப்பு.

புதிய தலைவர் தேர்வு கட்சிக்குள் நடக்காமல் தடுப்பதற்கு இடம்பெறும் காய் நகர்த்தல்கள்தான் அவை.

புதிய தலைவரை ஏகமனதாகத் தெரிவு செய்யக்கூடிய காலம் வரும் வரை மாவை தலைவர் என்ற பதவியில் இல்லாமல், இடைக்காலத் தலைவராக (Pro Tem Chairman) அல்லது தற்காலிகத் தலைவராக நீடிக்கட்டும் என்ற கதையை சம்பந்தனைக் கொண்டு இன்று கூடும் அரசியல் குழுக் கூட்டத்தில் பிரேரிக்க வைப்பதற்கான தயார்படுத்தல்கள் எல்லாம் கனகச்சிதமாக இதுவரை நடந்திருக்கின்றன எனத் தெரிகிறது.

ஆனால், தலைவர் தெரிவு உட்பட கட்சியின் தேசிய மாநாடு திட்டமிட்டபடி அந்தத் திகதியில் நடைபெற்றேயாக வேண்டும் என்பதில் இன்றைய கூட்டத்தில் பங்குபற்றும் அரசியல் குழு உறுப்பினர்களின் கணிசமானோர் மிக உறுதியாக இருக்கின்றனர் என்பதை உறுதிப்படுத்த முடிந்தது.

சம்பந்தன், மாவை ஆகியோருடன் தலைவர் தெரிவில் தமக்கு வெற்றி வாய்ப்பு இல்லை என்று கருதும் வேட்பாளர் இருப்பாராயின் அவரும் தலைவர் தெரிவைத் தள்ளிப்போடும் திட்டத்திற்கு இன்று தலையசைக்கக் கூடும்.

ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராஜா, சார்ள்ஸ் நிர்மலநாதன் எம்.பி. ஆகியோரின் நிலைப்பாடு என்னவென்பது தெரியவில்லை. சில சமயங்களில் தலைவர் தேர்வும் மாநாடும் திட்டமிட்டபடி நடைபெற வேண்டும் என அவர்கள் இருவரும் வலியுறுத்தக் கூடும்.

ஆனால், பதில் பொதுச் செயலாளர் டாக்டர் சத்தியலிங்கம், சிரேஷ்ட துணைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், நிர்வாகச் செயலாளர் குலநாயகம், முன்னாள் பொதுச் செயலாளர் துரைராஜசிங்கம், சாணக்கியன் போன்றோர் திட்டமிட்டபடி மாநாடும் தலைவர் தெரிவும் நடைபெற வேண்டும் என்பதில் மிக உறுதியாக நிற்கின்றனர் என்று தெரிகிறது.

கலையரசன் எம்.பி. கடைசி வரை வழமை போல மதில் மேல் பூனையாக இருப்பார் என்று எதிர்பார்க்கலாம்.

தலைவர் தெரிவுக்குப் போட்டியில் இருக்கும் சிறிதரனும் சுமந்திரனும் தலைவர் தெரிவு மற்றும் மாநாடு குறித்து வெளியில் கூட்டங்களில் எப்படிப் பேசினாலும், இன்று அரசியல் குழுக் கூட்டத்தில் எப்படி நடப்பார்கள் என்பதை இன்று இரவு வரை இருந்து, அவதானித்துத் தான் அறிந்து கொள்ள முடியும்.

ரைட்டில் சிக்னல் போட்டு, லெஃப்டில் திரும்புவது மாதிரி வெளிப் பேச்சில் ஒன்றைப் பேசி, இன்று அரசியல் குழுக் கூட்டத்தில் எப்படி நடப்பார்கள் என்பதை வாசகர்களின் ஊகத்துக்கே விட்டு விடுகிறேன். நடிப்புக்கலை பற்றிய விடயத்தில் நம் வாசகர்கள் டாக்டர் பட்டம் பெற்றவர்கள். திறமைசாலிகள் அவர்கள். சரியாக எடை போடுவார்கள் என்று கருதி அப்படியே விட்டு விடுகிறேன்......!

## தமிழரசுத் தலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தமிழரசுக் கட்சியின் தலைவர் பதவிக்குப் போட்டியிடும் வேட்பாளர்களில் ஒருவரான யாழ்ப்பாணம் – கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனை நாடாளுமன்ற வளாகத்தில் நேற்று நேரில் சந்தித்துப் பேசியபோதே சம்பந்தன் எம்.பி. மேற்கண்டவாறு கூறினாராம்.

தமிழரசுக் கட்சியின் புதிய தலைவர் தெரிவு மற்றும் தேசிய மாநாடு தொடர்பில் இறுதி முடிவெடுக்கும் கட்சியின் அரசியல் குழுக் கூட்டம் இன்று பிற்பகல் 3 மணிக்குக் கொழும்பில் உள்ள சம்பந்தன் எம்.பியின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அதற்கு முன்பதாக நேற்று முற்பகல் நாடாளுமன்ற வளாகத்தில் சிறிதரன் எம்.பியை நேரில் சந்தித்துக் கட்சியின் ஒற்றுமைப் பயணம் தொடர்பில் பெருந்தலைவர் சம்பந்தன் எம்.பி. பேசினார்.

"இலங்கைத் தமிழரசுக் கட்சியில் எல்லோரும் ஒற்றுமையாக இருக்க வேண்டும். கட்சியின் தேசிய மாநாடு சிறப்பாக நடக்க வேண்டும். இந்நிலையில், புதிய தலைவர் தெரிவு போட்டி இல்லாமல் நடைபெறும் நிலைமையை ஏற்படுத்த முடியாதா?" – என்று இதன்போது சிறிதரனிடம் சம்பந்தன் வினவினார்.

"நாளை (இன்று) உங்கள் வீட்டில் தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுக் கூட்டம் நடைபெறும்தானே ஐயா. அதில் இது தொடர்பில் தீர்மானம் எடுப்போம்" – என்று சிறிதரன் பதிலளித்தார்.

## அமெரிக்கப் பிரஜை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

67 வயதான அமெரிக்க சுற்றுலாப் பயணி ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று ஹோட்டல் நிர்வாகம் களுத்துறைப் பொலிஸாருக்கு வழங்கிய தகவலின் அடிப்படையில் ஹோட்டல் அறையிலிருந்து அவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

ஹோட்டலின்அறைஎண்324இல்அவரது சடலம் காணப்பட்டது என்று களுத்துறை வடக்குப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதையடுத்து இந்தச் சம்பவம் தொடர்பில் களுத்துறை குற்றத் தடுப்புப் பொலிஸாரும் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்

## உலகத் தமிழாராய்ச்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அமைந்துள்ள உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலை நினைவாலயத்தில் காலை 9.30 மணிக்கு உணர்வு பூர்வமாக நினைவேந்தல் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இதில் பொதுமக்களும், தமிழ் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளும் எவ்வித பேதமுமின்றி கலந்துகொண்டு அஞ்சலியைச் செலுத்த வேண்டும் என்று உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலை நினைவேந்தல் ஏற்பாட்டுக் குழு அழைப்பு விடுத்துள்ளது.

1974ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 3ஆம் திகதி தொடக்கம் 10ஆம் திகதி வரை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் ஏற்பட்ட கலவரத்தில் 9 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

உலகளாவிய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த இந்த மாநாட்டை யாழ்ப்பாணத்தில் நடத்தவிடாமல் அப்போதைய ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான அரசு, பொலிஸாரை அனுப்பிக் கலவரத்தை ஏற்படுத்தியது.

தமிழர்கள் மனதில் நீங்காத வடுவாக இந்தப் படுகொலைச் சம்பவம் பதியப்பட்டது.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## அரை நூற்றாண்டு நிறைவு!

பண்பாட்டுப் படுகொலைக் கொடூரம் ஒன்று அரங்கேறியதன் ஐம்பதாவது ஆண்டு நிறைவு தினம் இன்றாகும்.

ஈழத் தமிழ் மக்களின் வரலாற்றில் கறை படிந்த அத்தியாயங்களின் ஆரம்பப் புள்ளியாகவும் இது கொள்ளத்தக்கது.

ஈழத் தமிழர் தேசமே தன்னுடைய பண்பாட்டுப் பெருவிழாவாகக் கொண்டாடிய நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் நிறைவில் கோரவெறித் தாண்டவமாடிய பேரினவாதத்தின் கொடூரத்தை தமிழர் தேசம் கண்டு விக்கித்துப் போனதன் அரை நூற்றாண்டு முடிவில் நாம் இன்று நிற்கின்றோம்.

உலகம் எங்கும் உள்ள தமிழ் அறிஞர்கள், ஆர்வலர்கள், பொதுமக்கள் கூடி நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டை 1974ஆம் ஆண்டு ஜனவரி 3ஆம் திகதி தொடக்கம் 10 ஆம் திகதி வரை யாழ்ப்பாணத்தில் நடத்த முடிவெடுத்துக் காரியமாற்றினர்.

தமிழர் தேசம் தன் மொழியின் பெயரால் ஒரு சர்வதேச மாநாட்டை நடத்தி, எழுச்சிக் கோலம் கொள்வது தமிழர் தேசத்தை ஆக்கிரமிப்பதையே தனது கொலைவெறி நோக்காகக் கொண்டிருந்த பௌத்த - சிங்களப் பேரினவாத அரசுக்குப் பிடிக்கவில்லை.

பல்வேறு வகைகளிலும் தடைகளையும் இடைஞ்சல்களையும் ஏற்படுத்தியது சிறிமாவோவின் சிங்கள அரசு. வெளிநாட்டு அறிஞர்களின் வருகைக்கும் பல தொல்லைகளை கொடுத்தது. அனுமதிகளைக் கடைசி நேரம் வரை வழங்காமல் வைத்திருந்து இழுத்தடித்தது.

இந்த எழுச்சி மாநாட்டை ஈழத் தமிழர்களின் மூளை மையமான யாழ்ப்பாணத்தில் நடத்த விடாமல், கொழும்புக்கு மாற்றப் பண்ணுவதன் மூலம் அதன் பிரமாண்ட எழுச்சியை அடக்குவதற்கு அரச மட்டத்திலும், அதிகாரிகள் மட்டத்திலும் முன்னெடுக்கப்பட்ட சதித்திட்டங்களுக்கு விழா ஏற்பாட்டாளர்கள் மசிந்து கொடுக்கவில்லை. உறுதியாக நின்றார்கள்.

இப்படி எல்லா வழிகளிலும் போடப்பட்ட தடைகளையும் தகர்த்தெறிந்து, பேரெழுச்சியாக உலகத் தமிழாராய்ச்சி மாநாடு யாழ்ப்பாணத்தில் வெற்றிகரமாக நடைபெற்று, இறுதிக்கட்டத்தை எட்டிய போது, அதனால் ஏற்பட்ட சீற்றத்தில், இறுதி நாள் இறுதி நிகழ்வில் தனது கொலை வெறித் தாண்டவக் கைவரிசையைக் காட்டியது சிங்கள அரசு.

தமிழர் மரபையும், சரித்திரத்தையும், அதன் தொன்மையையும், சிறப்புக்களையும், இலங்கைத் தீவில் அதன் நீண்ட - நெடிய - வரலாற்று உரிமைகளையும் ஆராய்ச்சி ரீதியில் உறுதிப்படுத்தும் ஒரு மாநாடு தமிழர் தேசத்தில் பேரெழுச்சியாக நடந்து முடிவதற்கு அனுமதிக்கக் கூடாது என்ற வக்கிர புத்தியில் சிங்களம் அந்த மாநாட்டின் இறுதி நிகழ்வுக்கு மத்தியில் பொலிஸாரை ஏவி விட்டுக் கொலை வெறித் தாண்டவமாடியது.

மாநாடு நடந்த யாழ். வீரசிங்கம் மண்டபத்தின் முன்புறத்தில் ஒன்பது தமிழர்களும் ஆஸ்பத்திரியில் ஒருவருமாக மொத்தமாக பத்து தமிழர்களின் உயிர்கள் தமிழ் மண்ணின் - தமிழ் மக்களின் - தமிழ் மொழியின் - பெருமையைப் பேசி வெளிப்படுத்தியமைக்காகக் காவு கொள்ளப்பட்டன. பல டசின் கணக்கானோர் படுகாயமடைந்தனர்.


இந்தக் கொடூர அட்டூழியம் தமிழினத்தின் இதயத்தில் - ஆன்மாவில் - ஆழமான வடுவை ஏற்படுத்தியது. சிங்களத்தையும் உள்ளடக்கிய இலங்கைத் தீவுக்குப் பெரும் தலைகுனிவை உருவாக்கவும் அது தவறவில்லை.

அது மாத்திரமல்ல, இலங்கைப் பொலிஸின் இழிமையான பண்பை இந்த வெறித்தன நடவடிக்கை அம்பலப்படுத்தியது. அரச ஒடுக்கு முறையின் பயங்கரவாதக் கருவியாக தமிழ் மக்களின் மனதில் படியத் தொடங்கியது சிங்களப் பொலிஸ்.

சிங்களப் பேரினவாத வெறிப்போக்கு அரசின் இத்தகைய அரச பயங்கரவாதத்திற்கு எதிராக வன்முறை வடிவிலான போராட்டமே சரியான பதிலாக இருக்கும் என்ற எண்ணக் கருவை தமிழ் இளைஞர்களின் மனதில் ஆழ ஊன்றி விதைத்ததும் இந்தக் கொடூர நிகழ்வுதான்.

அந்த விதைப்பின் விளைவுகளைத்தான் அடுத்த மூன்றரை தசாப்தங்களாக, இரத்த ஆறு பெருக்கெடுத்தோடும் இனவாத யுத்தமாக இலங்கைத் தீவு எதிர்கொண்டது.

இன்று கடனிறுக்க வக்கற்ற இழிநிலைக்கு இலங்கை தேசத்தை இட்டுச் சென்றதன் மூலமே தமிழாராய்ச்சி மாநாட்டில் சிங்களம் புரிந்த இழி செயல் தான் என்பது கண்கூடு.



# செங்கடலுக்குக் கப்பல் அனுப்புவதால் இலங்கைக்கு என்ன நன்மை ஏற்படும்?

## நாடாளுமன்றில் சஜித் கேள்வி

“நாட்டில் பல பிரச்சினைகள் நிலவும்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஹூதி கிளர்ச்சியாளர்களைக் கட்டுப்படுத்துவதற்காக நாட்டின் பணத்தைச் செலவிடுகின்றார்.”

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றஞ்சாட்டினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இது தொடர்பில் கருத்து வெளியிட்ட சஜித் பிரேமதாஸ,

“நாட்டில் பாடசாலைக்குச் செல்லும் பிள்ளைகளுக்குத் தினசரி உணவுத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாத நிலை காணப்படுகின்றது. இளைஞர்கள் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர வர்த்தகர்கள் மற்றும் தொழில்முனைவோர் பாதிக்கப்பட்டுள்ளனர். நாட்டு மக்கள் இவ்வாறு துன்பப்படும்போது நாட்டின் பணத்தில் இருந்து 25 கோடி ரூபா செலவளித்து கடற்படையின் கடற்படைக் கப்பலை ஹூதி கிளர்ச்சிக் குழுவினரை ஒடுக்குவதற்காக அனுப்ப அரசு தீர்மானித்துள்ளது. இது பிரச்சினைக்குரிய விடயமாகும்.

நாட்டின் அத்தியாவசிய உள்ளக நடவடிக்கைகளுக்காக இருக்கும் பணம் ஹூதி கிளர்ச்சிக் குழுவினரை ஒடுக்குவதற்கு அனுப்பப்படும் வகையில், நாட்டின் கடனில் இருந்து குறைந்தது 25 பில்லியனையாவது குறைப்பதாக வெளிநாடுகள் உறுதியளித்துள்ளனவா என்பதை அறிய விரும்புகின்றோம். இதனால் என்ன பலன் என்று கேள்வி எழுப்புகின்றோம்.” – என்றார்.



# டலஸ்க்கு மொட்டு மீண்டும் அழைப்பு

## மஹிந்த வெற்றி பெற அவர் பாடுபட்டார் என்கிறார் நாமல்

“நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும எமது முகாமில் இருக்க வேண்டிய அரசியல் தலைவர். அவருடன் பேச்சு நடத்தி இணக்கப்பாட்டுக்கு வருவதற்கு மீண்டும் முயற்சிப்போம்.”

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது,

“டலஸ் அழகப்பெரும எமது முகாமில் இருக்க வேண்டிய அரசியல் தலைவர். அவருடன் பேச்சு நடத்தி ஒரு இணக்கப்பாட்டுக்கு வரலாம் என நம்புகின்றேன். இது எனது கருத்தே தவிர கட்சியின் கருத்து அல்ல. 2005 இல் மஹிந்த ராஜபக்ஷ வெற்றி பெற டலஸ் அழகப்பெரும பெரும் பாடுபட்டார். அவர் எம்மைப் போல் இடதுசாரி பொருளாதார சிந்தனை கொண்டவர்.” – என்றார்.

# சிவில் விமான சேவை அதிகார சபையின் பெண் ஊழியர் ஆயுதத்தால் படுகொலை!



சிவில் விமான சேவை அதிகார சபையின் பெண் ஊழியர் ஒருவர் கூரிய ஆயுதத்தினால் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார்.

கஹதுடுவ வெளியேற்ற பாதை தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் இருந்து வெளியேறும் போது சந்தேக நபர் ஒருவரினால் தாக்கப்பட்டு இவர் உயிரிழந்துள்ளார்.

41 வயதுடைய பெண்ணொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

# கடல் அட்டைகளுடன் ஆறு பேர் கற்பிட்டி உச்சமுனையில் கைது




(ரஸீன் ரஸ்மின்)

சட்டவிரோதமான முற்சியில் கடல் மார்க்கமாக இலங்கைக் குக் கொண்டுவரப்பட்டவை எனச் சந்தேகிக்கப்படும் 2032 கிலோ கிராம் கடல் அட்டைகள் கற்பிட்டி உச்சமுனை பகுதியில் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

வடமேற்கு கடற்படை கட்டளையின் விஜய கடற்படையினரால் உச்சமுனை பகுதியில் மேற்கொள்ளப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கையின் போதே இந்தக் கடல் அட்டைகள் மீட்கப்பட்டுள்ளன.

இதன்போது, 71 உரப் பைகளில் 2032 கிலோ கிராம் கடல் அட்டைகள் மறைத்து வைக்கப்பட்டிருந்ததன எனக் கடற்படையினர் குறிப்பிட்டனர்.

மேலும், இந்தக் கடல் அட்டைகளை கொண்டு செல்வதற்கு பயன்படுத்தப்பட்ட மூன்று டிங்கி இயந்திர படகுகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. அதில் பயணம் செய்த ஆறு பேர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் ஆறு பேரும் 21 வயது முதல் 43 வயதுடையவர்கள் எனவும், இவர்கள் கற்பிட்டி மற்றும் தலவில பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்றும் கடற்படையினர் மேலும் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் ஆறு பேரும், கைப்பற்றப்பட்ட கடல் அட்டைகள் மற்றும் மூன்று டிங்கி இயந்திர படகுகளுடன் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக கட்டுநாயக்க சுங்க அலுவலகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.



# இலங்கையின் குரங்குகளை பெற்றுக்கொள்ள சீனாவிலுள்ள மிருகக்காட்சிசாலைகள் ஆர்வம்

## விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தகவல்

சீனாவில் உள்ள பல தனியார் மிருகக்காட்சிசாலைகள் இலங்கையில் உள்ள குரங்குகளைக் கொள்வனவு செய்யக் காத்திருக்கின்றன என விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய போதே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

சீனாவில் சுமார் 20 ஆயிரம் தனியார் உயிரியல் பூங்காக்கள் இருக்கின்றன எனவும் துரதிர்ஷ்டவசமாக இந்த நடவடிக்கையை மேற்கொள்வதற்கு அனுமதிக்கப்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக சுமார் ஒரு லட்சம் செந்நிற குரங்குகளை அனுப்ப தயாராகியிருந்தோம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பெருமளவிலான குரங்குகள் விவசாயிகளின் பயிர்களை சேதப்படுத்துகின்றன, அதற்காக பாதுகாப்பு அமைச்சும் வனவிலங்கு அமைச்சும் ஒன்றிணைந்து இப்பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும் எனவும் அமைச்சர் மஹிந்த அமரவீர வலியுறுத்தியுள்ளார்.

# கேரளாவில் ஐயப்ப பக்தர்கள் மீது தடியடி: ஸ்டாலினுக்கு இந்து முன்னணி கண்டனம்



”மக்கா, மதீனா செல்லும் தமிழகத்தை சேர்ந்தவர்களுக்கு முள் குத்தினால் கூட உடனடியாக குரல் கொடுக்கும் தமிழக முதல்வர் ஸ்டாலின், அண்டை மாநிலமான கேரளத்தில் ஐயப்ப பக்தர்கள் மீது தடியடி நடத்தபடுவதை கண்டும் காணாமல் கள்ள மௌனத்தில் இருப்பது இந்து விரோத செயல்,”

– இவ்வாறு இந்து முன்னணியின் மாநிலத் தலைவர் காடேஸ்வரா சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

“சபரிமலை மண்டல பூஜை காலத்தில் கேரள மாநில அரசின் கவனக்குறைவாலும் அசட்டையாலும் ஐயப்ப பக்தர்கள் சொல்ல முடியாத துயரை அடைந்தனர். ஒரு கட்டத்தில் கேரள மாநில உயர்நீதிமன்றமே தாமாக முன்வந்து தலையிட்டு உத்தரவுகள் பிறப்பித்தது. ஆனால், அந்த உத்தரவுகளையும் மாநில அரசு நடைமுறைபடுத்தவில்லை என்பது கொடுமையிலும் கொடுமை.

இந்த நிலையில் மகரவிளக்கு பூஜைக்காக நடை திறக்கபட்டு பல மாநில பக்தர்கள் கோடிக்கணக்கில் வருகை தரும் நிலையில் மண்டல பூஜை காலத்தைவிட மிக மோசமாக கேரள கொம்யூனிஸ்ட் அரசு நடந்துகொள்கிறது. சன்னிதான பாதுகாப்பில் ஈடுபட்டிருக்கும் கேரள மாநில பொலிஸார் பக்தர்கள் மீது தடியடி நடத்தியிருக்கிறார்கள். “ஏன்டா இங்கே வர்றீங்க?” என்று பக்தர்களை கடுமையான சொற்களைப் பேசி நோகடித்திருக்கிறார்கள்.

சபரிமலை புனிதம் கெடுக்க ஆயிரக்கணக்கான அதிரடிப்படை காவலர்களை சபரிமலையில் குவித்து இறை நம்பிக்கையற்ற பெண்களை சன்னிதானத்துக்கு அனுப்ப முயன்றதில் ஒரு பங்கு கூட ஐயப்ப பக்தர்கள் மண்டல மற்றும் மகர விளக்கு பூஜை காலத்தில் தரிசனம் செய்விக்க காம்ரேட் முதல்வர் பினராயி விஜயன் முயற்சிக்கவில்லை என்பதும் பொலிஸாரை தன் கட்டுபாட்டில் வைத்துள்ள முதல்வர் பக்தர்களை துன்புறுத்த அவர்களை பிரயோக படுத்துவதும் கொம்யூனிஸ்ட் அரசின் அப்பட்டமான இந்து விரோத போக்கை எடுத்துகாட்டுகிறது.

பக்தர்கள் கூட்டம் அதிகம் என்பது மிகைபடுத்தபட்ட செய்தியாகவே தோன்றுகிறது. வழக்கம் போல மகரவிளக்கு காலத்தில் வருகின்ற அளவு பக்தர்கள்தான் வருகிறார்கள். ஆனால் அடிப்படை வசதிகள் மற்றும் போக்குவரத்துக்கு போதிய திட்டமிடல் இல்லாததாலும் நிலக்கல் – பம்பா – நிலக்கல் பகுதிக்கு மிக குறைவான பேருந்து இயக்கபடுவதாலும் பாதுகாப்பு பணியில் போதுமான பொலிஸார் ஈடுபடுத்தபடாததாலும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு ஒட்டுமொத்தமாக பயனற்று பக்தர்கள் சொல்லொண்ணாத துயரடைகிறார்கள்.

பல ஆயிரம் கிலோ மீற்றர் தொலைவுக்கு அப்பால் மக்கா, மதீனா செல்லும் தமிழகத்தை சேர்ந்தவர்களுக்கு முள் குத்தினால் கூட உடனடியாக குரல் கொடுக்கும், களமிறங்கும் தமிழக முதல்வர் அண்டை மாநிலமான கேரளத்தில் ஐயப்ப பக்தர்கள் மீது தடியடி நடத்தபடுவதை கண்டும், காணாமல் கள்ள மௌனத்தில் இருப்பது காம்ரேட் மாதிரியும், திராவிட மாதிரியும்இந்து விரோத செயலில் ஈடுபடுவதில் ஒருவருக்கொருவர் சளைத்தவர்கள் அல்ல என்பதை எடுத்து காட்டுகிறது.” என்று குறிப்பிட்டுள்ளார்.

# முகமது சமிக்கு ‘அர்ஜுனா விருது’

இந்திய அணியின் கிரிக்கெட் வீரர் முகமது சமி அந்த நாட்டு அரசி னால் ‘அர்ஜுனா விருது’ வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

மேலும் இந்தியாவின் 82 ஆவது கிராண்ட்மாஸ்டர் பட்டம் வென்ற தமிழக செஸ் வீராங்கனை ஆர்.வைஷாலிக்கும் அர்ஜ/னா விருது வழங்கப்பட்டுள்ளது.

டில்லி குடியரசுத் தலைவர் மாளிகையில் நேற்று நடைபெற்ற தேசிய விளையாட்டு விருதுகள் வழங்கும் நிகழ்வில், குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு வீரர்களுக்கு விருதுகளை வழங்கி கௌரவித்துள்ளார்.

இந்தியாவில் விளையாட்டுத் துறையில் சிறந்து விளங்கும் போட்டியாளர்கள், பயிற்சியாளர்கள், பங்களிப்பாளர்களுக்கு இந்திய மத்திய அரசு ஆண்டுதோறும் அர்ஜுனா விருது வழங்கி கௌரவிக்கப்படுகிறது.



இந்த நிலையில், 2023 ஆம் ஆண்டுக்கான சிறந்த வீரர்கள், பயிற்சியாளர்களுக்கான விருது பட்டியல் சமீபத்தில் அறிவிக்கப்பட்டது.

இதன்படி கிரிக்கெட் வீரர் முஹமது ஷமி, தமிழக செஸ் வீராங்கனை ஆர். வைஷாலி உள்ளிட்ட 26 பேருக்கு வழங்கப்பட்டுள்ளது.

# ஜப்பானில் மீண்டும் பாரிய நிலநடுக்கம்!




ஜப்பானின் மேற்கு கடற்கரை பகுதியான ஹோன்ஷூவில் நேற்று பாரிய நிலநடுக்கம் பதிவாகியுள்ளது.

6.0 ரிக்டர் அளவில் இந்த நிலநடுக்கம் பதிவாகியுள்ளதாக புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. ஆனாலும் சுனாமி எச்சரிக்கை ஏதும் விடுக்கப்படவில்லை.

மேற்படி நிலநடுக்கத்தில் ஏற்பட்ட சேத விபரங்கள் தொடர்பில் இது வரையில் எவ்வித தகவல்களும் வெளியிடப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கடந்த 01 ஆம் திகதி ஜப்பானில், ஏற்பட்ட நிலநடுக்கத்தைத் தொடர்ந்து சுனாமி எச்சரிக்கையும் விடுக்கப்பட்டிருந்தது.

அந்த நிலநடுக்கத்தில் சிக்கிண்ட 100 பேர் இதுவரையில் மீட்கப்படாத நிலையில் நேற்று மீண்டும் நிலநடுக்கம் ஏற்பட்டிருப்பது அந்த நாட்டு மக்களை அச்சத்தில் ஆழ்த்தியுள்ளது.

ஜப்பான் உலகில் நிலநடுக்கத்தால் அதிகம் பாதிக்கப்படக்கூடிய நாடுகளில் ஒன்றாகும், ஒவ்வொரு ஆண்டும் சுமார் 1,500 நிலநடுக்கங்கள் ஜப்பானை தாக்குகின்றன. இருப்பினும், பெரும்பாலானவை உணர முடியாத அளவுக்கு மிதமானவைகளே.

இந்த ஆண்டு தொடக்கத்திலேயே ஏற்பட்ட நிலநடுக்கம் பெரிய சேதங்களை ஏற்படுத்தியுள்ளது. அப்போதே அடுத்த சில வாரங்களுக்கு நிலநடுக்க அச்சுறுத்தல் இருப்பதாகக் கூறிய நிலையில் நேற்று மீண்டும் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலநடுக்கத்தில் ஏற்பட்ட சேத விபரங்கள் தொடர்பில் இது வரையில் எவ்வித தகவல்களும் வெளியிடப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நாய்கள் இறைச்சிக்காக கொல்லப்படுவதை தடுக்கும் வகையில் தென்கொரியாவில் சட்டம்




தென் கொரியாவில் நாய்கள் இறைச்சிக்காக கொல்லப்படுவதை தடுக்கும் வகையில் சட்டம் ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதன்படி, 2027ஆம் ஆண்டில் இருந்து இறைச்சிக்காக நாய்களை கொல்லவோ, விற்பனை செய்யவோ முயன்றால், 3 ஆண்டுகள் வரை சிறை தண்டனை விதிக்கப்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

நாய் இறைச்சி உண்பது அவர்களின் வழக்கமாக இருந்தாலும், விலங்குகளின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கும் வகையில் இந்த சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இறைச்சி கடை உரிமையாளர்கள் 3 ஆண்டுக்குள் வேறு தொழிலை தொடங்கி, வருவாய் ஈட்டுவதற்கு அரசாங்கம் உதவும் எனவும் உறுதியளிக்கப்பட்டுள்ளது.

தென் கொரியாவில் உணவு நோக்கங்களுக்காக சுமார் 1,100 நாய் பண்ணைகள் இயங்குகின்றன. மேலும், இந்த பண்ணைகளில் சுமார் மில்லியன் கணக்கில் நாய்கள் வளர்க்கப்படுகின்றன என்று விவசாயம், உணவு மற்றும் கிராமப்புற விவகாரங்கள் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்த மசோதா தற்போது சர்ச்சையை கிளப்பி இருக்கிறது. இளம் தலைமுறையினர் ஒருபுறமும், வயதில் மூத்தவர்கள் மறுபுறமும் தங்களது எதிர்ப்பையும், ஆதரவையும் காட்டி வருகின்றனர்.

# பிரேசிலில் லொறி மீது பஸ் மோதி விபத்து: 25 பேர் பலி



பிரேசிலில் லொறி மீது சுற்றுலா பஸ் மோதி விபத்தி விபத்துக்குள்ளானதில் 25 பேர் உயிரிழந்துள்ளனர். இந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

பிரேசிலின் வடகிழக்கு மாநிலமான பாஹியாவில் உள்ள நோவா பாத்திமா – கவியாவோ நகரங்களுக்கு இடையிலான ஃபெடரல் சாலையில் சுற்றுலாப் பயணிகளுடன் சென்ற சுற்றுலா பஸ்ஸும், லொறியும் மோதிக்கொண்டன. இந்த விபத்தில் சுமார் 25 பேர் உயிரிழந்தனர். மேலும் 6 பேர் காயமடைந்துள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்தில் பலியானவர்களில் பெரும்பாலோர் பஸ்ஸில் இருந்தவர்கள் எனக் கூறப்படுகிறது. காயமடைந்தவர்கள் அருகில் உள்ள மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். 25 பேர் உயிரிழந்ததைத் தொடர்ந்து ஜாக்கோபினா நகராட்சி மூன்று நாள்கள் துக்கம் அனுசரிக்கப்படும் எனத் தெரிவித்துள்ளது.

வாகனங்கள் ஒன்றை ஒன்றை முந்திச் செல்லும்போது இந்த விபத்து ஏற்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர். விபத்துக்கான காரணம் என்பது குறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# ஆறாவது ஆண்டின் நீங்காத நினைவலைகளில்...!

**10.01.2024**

மண்ணில்
16 . 12 . 1967



விண்ணில்
10 . 01 . 2018

## பேராசிரியர் கலாநிதி
## ஜோன் மனோகரன் கென்னடி விஜயரத்தினம்

(முன்னாள் விரிவுரையாளர் - ஆங்கில இலக்கியம், தென்கிழக்கு, கிழக்குப் பல்கலைக்கழகம்,
பேராசிரியர் - எதியோப்பியப் பல்கலைக்கழகம், எதியோப்பியா)

கென்னடி!
காரைநகர் கண்ட கவித்துவமேதை
அகிலம் போற்றிடும் அறிவாளன்
ஒப்பற்ற சிந்தனையாளன்
தன்னலமற்ற தொண்டு புரிந்தவன்
தனித்தன்மை கொண்டவன்
தன் சிந்தனைப் பேச்சால் மக்களைக் கவர்ந்தவன்
மறக்கமுடியாத ஒரு இளம் காவியம்!
வருங்கால இளைஞர்களின் முன்னோடி!
கென்னடி ஒரு தனி சகாப்தம்!
காரைநகர் சிவனின் பாதமலர் சேர்ந்தாயோ?

**கென்னடியின் உதிர்வு**
**எமது மண்ணுக்கும், இனத்துக்கும் பேரிழப்பாகும்.....**
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

'சண்முகனின் வாசம்',
நீலிப்பந்தனை, காரைநகர்.

குடும்பத்தினர்,நண்பர்கள், உறவினர்கள்,
ஆசிரியர்கள், புலம்பெயர் வாழ் நண்பர்கள்.

# அழகுக் கலை நிலையங்கள் திறக்க யாழில் கடுமையான கட்டுப்பாடுகள்!

## இனி வரும் என்கிறார் அழகுக் கலை நிபுணர்கள் ஒன்றியத் தலைவர்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ். மாவட்டத்தில் அழகுக் கலை நிலையங்களைப் புதிதாக திறப்பதற்கும் அழகு கலை சார்ந்த பயிற்சி நெறிகளை நடத்துவதற்கும் கடுமையான கட்டுப்பாடுகளை உள்ளூராட்சி சபைகளோடு இணைந்து நடைமுறைப் படுத்த உள்ளோம்.

யாழ். மாவட்ட அழகுக் கலை நிபுணர்கள் ஒன்றியத்தின் தலைவர் பிரதீபா தினேஷ் இவ்வாறு தெரிவித்துள்ளார்.




யாழ். மாவட்ட அழகுக் கலை நிபுணர்கள் ஒன்றியம் யாழ். ஊடக மையத்தில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போது ஒன்றியத்தின் தலைவர் பிரதீபா தினேஷ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அண்மைக் காலங்களில் யாழ்ப்பாணத்தில் அழகுக் கலை தொடர்பான அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்கள் எதுவும் இன்றி புதிய அழகுக் கலை நிலையங்கள் பரவலாக திறக்கப்படுகின்றன என்ற குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

அது மட்டுமின்றி யாழ்ப்பாணம் தவிர்ந்த பிரதேசங்களில் இருந்தும், வெளிநாடுகளில் இருந்தும் வருகை தந்து யாழ்ப்பாணத்தில் புதிய அழகுக் கலை நிலையங்கள் திறக்கப்படுவது மட்டுமல்லாமல் அழகுக் கலை சார்ந்த குறுகியகால பயிற்சிப் பட்டறைகளும் தொடர்ச்சியாக நடத்தப்படுகின்றன.

இதனால் எமது உள்ளூர் அழகுக் கலை ஆர்வம் கொண்ட மாணவர்களும் அழகுக் கலை நிபுணர்களும் பாதிக்கப்படுகின்றனர் என்ற குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

இதனைக் கட்டுப்படுத்தும் நோக்கிலேயே யாழ். அழகுக் கலை நிபுணர்கள் ஒன்றியம் கட்டுப்பாடுகளை நடைமுறைப்படுத்தியுள்ளது.

எமது ஒன்றியத்தில் யாழ்ப்பாணத்தில் இயங்கும் 120 இற்கும் மேற்பட்ட அழகுக் கலை நிலையங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இந்த ஒன்றியமானது யாழ். மாவட்ட செயலகத்தில் பதிவு செய்யப்பட்டு மாவட்ட செயலகத்தின் வழிநடத்தலில் இயங்கி வருகின்றது.

இந்த நிலையில் அழகுக் கலை தொழில் என்பது சருமங்கள், தோல் சார்ந்த சுகாதார விடயங்களோடு சம்பந்தப்படுவதால் உள்ளூராட்சி மன்றங்களின் சுகாதார பிரிவினரோடு இணைந்து அதற்கான அனுமதி வழங்குவதில் கடுமையான கட்டுப்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கு ஒன்றியம் தீர்மானித்துள்ளது.

அழகுக்கலை நிலையம் ஒன்றைத் திறப்பதற்கான வியாபார அனுமதியை வழங்குகின்ற போது அந்த நிலையத்தின் உரிமையாளர் NVQ level 4 சான்றிதழைப் பெற்றிருப்பது கட்டாயமானது.

இதனைப் பரிசீலித்தே வியாபார சான்றிதழ்கள் வழங்கப்பட வேண்டும் என்று யாழ். மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களுக்கு உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளோம்.

எனவே இந்த விடயங்களை அனைவரும் கருத்தில் கொண்டு செயற்படுமாறும் அழகுக்கலை பயிற்சி நெறிகளை நடத்துவதென்றால் வகுப்பறைக் கட்டமைப்பு கட்டாயம் அமைக்கப்பட வேண்டும் எனவும் யாழ். மாவட்ட அழகுக்கலை நிபுணர்கள் ஒன்றியம் தீர்மானித்துள்ளது.- என்றார்.

# வடிகால்களின் கொங்கிறீட் மூடிகள் உடைந்திருக்கின்றமையால் சிரமம்!

## தலவாக்கலை நகரில் இந்த நிலைமை

(தலவாக்கல நிருபர்)

தலவாக்கலை நகரிலிருந்து நுவரெலியா வீதியில் மல்லியப்பு வரையான வீதியின் இருபுறமும் அமைந்துள்ள வடிகாலமைப்பின் கொங்ரீட் மூடிகள் சில உடைந்து வடிகான்கள் திறந்த நிலையில் காணப்படுகின்றன என்று பொது மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.




இரண்டு பாடசாலைகள், கால்நடை வைத்திய அலுவலகம், கூட்டுறவுச் சங்கம், சமுர்த்தி அலுவலகம், லங்கா சதொச நிறுவனம், பிரதேச செயலகம், பல அரச மற்றும் தனியார் வங்கிகள் உட்பட பல கடை தொகுதிகள் இப்பகுதியில் காணப்படுகின்றன.

இந்த வீதியின் இருபுறமும் உள்ள நடை பாதைகளை அதிகமானோர் தினந்தோறும் பயன்படுத்தி வருகின்றனர். இருபுறமும் காணப்படுகின்ற வடிகாலமைப்பின் ஊடாக கழிவு நீர் செல்கின்றது. வடிகாலமைப்பின் மேலே மூடப்படும் சில மூடிகள் உடைந்து காணப்படுவதால் அவ்வழியே பயணிக்கும் பொது மக்கள், பாடசாலை மாணவர்கள் மற்றும் இதர தொழில்களுக்குச் செல்வோர் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

எனவே வடிகான்களை மூட சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தலவாக்கலை பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# குடிசை வீடுகளில் வசிக்கும் மக்களுக்கான வீடுகளை நிர்மாணிக்கும் பணிகள் ஆரம்பம்

குறைந்த வருமானம் பெறும், குடிசை வீடுகளில் வசிக்கும் மக்களுக்காக 10 ஆயிரம் வீடுகளை நிர்மாணிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என நகர அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

மாளிகாவத்தை, சுகததாச உள்ளக விளையாட்டரங்கு அருகில், மாதம்பிட்டிய, கொலம்பகே மாவத்தை, நாவல ஆகிய பகுதிகளில் இந்தத் தொடர் மாடி வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளன என அதன் பணிப்பாளர் நாயகம் பிரசாத் ரணவீர தெரிவித்துள்ளார்.

தற்போது வீடுகள் வழங்கப்பட்டுள்ள மக்களுக்கான வீட்டுரிமை பத்திரங்களை வழங்கும் நடவடிக்கை அடுத்த மாதம் முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான 14 ஆயிரம் வீட்டுரிமைப் பத்திரங்கள் வழங்கப்படவுள்ளன. அவற்றில் 8 ஆயிரம் வீட்டுரிமை பத்திரங்கள் இந்த ஆண்டுக்குள் வழங்கப்படவுள்ளன.


தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு
கட்டைக்காடு சென்மேரீஸ் விளையாட்டு கழக
ஏற்பாட்டில் DAN TV யின்
அனுசரனையுடன்



வடமராட்சி கிழக்கில்
03வது மாபெரும்
பட்டத் திருவிழா
2024

காலம் : 16.01.2023 (செவ்வாய்கிழமை)
நேரம் : பிற்பகல் 2.00 மணி
இடம் : கட்டைக்காடு சென்மேரீஸ் விளையாட்டுக் கழக மைதானம்

தங்களின் கற்பனைத்திறனுக்கு எம் மண்ணில் ஓர் அங்கீகாரம் தமிழரின் பண்பாட்டு கலையை எம்முடன் சேர்ந்து கொண்டாடி பணப்பரிசில்களையும் வெற்றி பெற்று தைபொங்கலை கொண்டாடுங்கள்.



முதலாம் பரிசு 100,000/=
இரண்டாம் பரிசு 50,000/=
மூன்றாம் பரிசு 25,000/=



பின்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு உங்கள் பதிவுகளை உறுதிப்படுத்தி கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்
றஜனி : 077 843 5381 தயாபரன் : 077 152 9308
ஏற்பாட்டுக்குழு



# பங்கமில்லா வாழ்வுபெறத் தைப்பொங்கலை மண்பானையில் பொங்கிக் கொண்டாடுவோம்

## தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் ஐங்கரநேசன் அழைப்பு



தமிழ் மக்களின் தேசியத் திருநாள்களில் ஒன்றாகக் கொண்டாடப்படும் தைப்பொங்கல் இயற்கையைப் போற்றுகின்ற ஒரு பண்பாட்டுப் பெருவிழாவாகும். தொன்றுதொட்டு இவ்விழாவில் இயற்கைக்கு இசைவான மண்பானைகளிலேயே பொங்கல் இடம்பெற்று வந்துள்ளது. ஆனால், மண்பானைகளின் இடத்தை இப்போது அலுமினியப் பானைகள் ஆக்கிரமித்து வருகின்றன. அலுமினியப் பானைகள் இயற்கையைப் போற்றுகின்ற ஒரு விழாவுக்குப் பொருத்தமற்றது என்பதோடு, உடல் நலத்துக்குக் கேடானதாகவும் உள்ளன. தமிழர் பண்பாடும் உடல் நலமும் பங்கமில்லாத வாழ்வு பெறப் பொங்கலை மண்பானையில் கொண்டாடுவோம் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் அழைப்பு விடுத்துள்ளார்.

தைப்பொங்கலில் மண்பானைகளின் முக்கியத்துவம்பற்றி பொ.ஐங்கரநேசன் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு அழைப்பை விடுத்துள்ளார்.


அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

அலுமினியம் மிகவும் இலேசானது. உலோகம் ஆகையால் இலகுவில் வெப்பத்தைக் கடத்த வல்லது. இதனால், சமையலை விரைந்து முடிக்க வல்லது. நெளிந்து வளைந்தாலும் உடைந்து விடாது, ஒப்பீட்டளவில் விலை மலிவானது. இவை போன்ற காரணங்களால் சமையல் அறைகளில் பிரதான பாத்திரங்களாக அலுமினியப் பாத்திரங்கள் இடம்பெற்றுள்ளன. அலுமினியப் பாத்திரங்களில் உணவு சமைக்கும்போது அலுமினியம் உணவுடன் சேர்வதைத் தவிர்க்கும் பொருட்டுப் பாத்திரத்தின் உட்பகுதியில் அலுமினியம் ஒட்சைட்டுப் படலம் இடப்படுகிறது.

அலுமினியப் பாத்திரங்களைத் தேய்த்துச் சுத்தம் செய்யும்போது பாதுகாப்புப்படலம் தேய்வடைந்து உணவுப் பாதுகாப்பு கேள்விக்குறியாகி விடுகிறது. மேலும், சமைக்கப்படும் உணவுப் பொருளின் அமிலகார இயல்பு, சேர்க்கப்படும் உப்பு, சமையல் வெப்பநிலை ஆகியனவற்றைப் பொறுத்து அலுமினியம் கரைந்து உணவுடன் கலப்பதும் அவதானிக்கப்பட்டுள்ளது. உடலுடன் சேரும் அலுமினியம் மூளை நரம்புகளைப் பாதிப்பதுடன் ஏற்கனவே சிறுநீரக நோயுடையவர்களின் சிறுநீரகங்களை மேலும் பாதிப்படையவும் செய்கிறது என மருத்துவ ஆய்வுகள் தெரிவித்துள்ளன.

மட்பாத்திரங்கள் அவற்றின் மேற்பரப்பில் இயற்கையாகவே உள்ள நுண்துளைகள் ஊடாக வெப்பத்தைப் பரவி உணவைச் சீராக வேகவைக்கின்றன. மெதுவாகவே சூடுபடுத்துவதால் உணவில் போசணைப் பொருள்களின் அழிவு தவிர்க்கப்படுகிறது. மண் கார இயல்பு கொண்டதால் உணவில் அமிலத் தன்மையை சமன் செய்கிறது. சமைக்கும்போது மண்ணிலிருந்து கனியுப்புகள் உணவிற்கு விடுவிக்கப்படுவதால் உணவு கூடுதல் போசணைப் பெறுமானம் பெறுகிறது. மேலும் உணவின் வாசனையுடன் மண்ணின் வாசனையும் சேர்ந்து உணவுக்குக் கூடுதல் சுவையையும் தருகிறது.

எதனையுமே அவசரகதியில் செய்து விடத் துடிக்கும் நாம் உடல் ஆரோக்கியத்தைப் பேண வேண்டிய சமையலையும் அவ்வாறே விரைந்து முடிக்கத் தலைப்பட்டு உலோகப் பாத்திரங்களை நாடியுள்ளோம். இதன் விளைவாக நோயின் வாய்ப்பட்டும் வருகிறோம். மட்பாண்டங்களுக்கு முழுமையாகத் திரும்புதல் இயலாததாக இருக்கலாம். எனினும் தமிழ் மக்களின் இயற்கையைப் போற்றும் தைப்பொங்கல் திருநாளிலாவது மண்பானைகளில் பொங்கல் இடுவோம். இது நலிவடைந்துள்ள மட்பாண்டக் கைவினைஞர்களது வாழ்வு வளம்பெறவும் உதவும். – என்றும் தெரிவித்துள்ளார்.



# திருமலை கந்தளாய் குளத்தின் பத்து வான் கதவுகளும் திறப்பு!

## வீடுகளுக்குள் புகுந்தது வெள்ளம்!!

**(அப்துல்சலாம் யாசீம், ஏ.எச்.ஹஸ்பர்)**

திருகோணமலை மாவட்டத்தில் தொடர்ச்சியாக பெய்து வரும் மழையால் கந்தளாய்க் குளத்தின் பத்து வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன என்று பொறியியலாளர் சின்தக சுரவீர தெரிவித்தார்.

கந்தளாய்க் குளத்தின் நீர்மட்டம் அதிகரித்து காணப்படுவதால் பத்து வான் கதவுகளும் நேற்று ஓர் அடி உயரத்தில் திறந்து விடப்பட்டுள்ளன என்று அவர் தெரிவித்தார்.

தொடர்ச்சியாக மழை பெய்து வருவதால் வெருகல் பிரதேசத்தில் சில வீடுகளுக்குள் வெள்ளநீர் புகுந்துள்ளது. கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட மாஞ்சோலைச்சேனை, மாஞ்சோலை மற்றும் அண்ணன் நகர் போன்ற பகுதிகளில் உள்ள வீடுகளில் வெள்ள நீர் புகுந்துள்ளது என்று பிரதேச செயலாளர் எம்.எச்.கனி தெரிவித்தார்.

அத்துடன் மொரவெவ – பேரமடுவ குளங்கள் நிரம்பி வழிவதாகவும் மாவிலாறு நீர்த்தேக்கத்தின் நான்கு வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன என்றும் திருகோணமலை மாவட்ட நீர்ப் பாசனத் திணைக்களப் பணிப்பாளர் கே. சுப்பிரமணியம் தெரிவித்தார்.

இந்தப் பகுதியில் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் தொடர்பில் உரிய அதிகாரிகள் வந்து பார்வையிடவில்லை என்று பாதிக்கப்பட்ட மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.





# பிரித்தானியாவின் இளவரசியும் கணவரும் இன்று இலங்கைக்கு வருகை தருகின்றனர்

பிரித்தானிய அரச குடும்பத்தைச் சேர்ந்த ரோயல் இளவரசி மற்றும் வைஸ் அட்மிரல் சேர் திமோதி லோரன்ஸ் ஆகியோர் மூன்று நாகள் (ஜனவரி 10 – 13) பயணமாக இன்று புதன்கிழமை இலங்கைக்கு விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளனர்.

இலங்கை மற்றும் ஐக்கிய இராஜ்ஜியம் ஆகிய இரு நாடுகளுக்கிடையிலான இராஜதந்திர உறவுகளின் 75 ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையில் அதனை சிறப்பிக்கும் முகமாக அரச குடும்பத்தினரின் இந்த விஜயம் இடம்பெறவுள்ளது. ஐக்கிய இராஜ்ஜியமும் இலங்கையும் பல வலுவான தனிப்பட்ட உறவுகளையும் பொது நலன்களையும் பகிர்ந்து கொள்கின்ற மையோடு பொதுநலவாய அமைப்பின் ஊடாக இவ்விரு நாடுகளும் பங்காளி நாடுகளாக திகழ்ந்து வருகின்றன.

இலங்கைக்கு பயணமாக வரும் பிரித்தானிய இளவரசி கொழும்பில்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்திக்கவுள்ளார். அத்துடன் வணிக அமைப்புகளையும் தொண்டு நிறுவனங்களையும் சந்திக்கவுள்ளார். குறிப்பாக இந்த உத்தியோகபூர்வ விஜயத்தில் சேவ் த சில்ரன் அமைப்பின் இலங்கை செயற்திட்டங்களையும் மேற்பார்வையிடவுள்ளார்.

அத்தோடு அண்மையில் கொமன் வெல்த் வோர் கிரேவ்ஸ் (பொதுநலவாய போர் கல்லறைகள்) அமைப்பின் தலைவராக இளவரசி பதவியேற்றுள்ள நிலையில் அதற்கமைவாக இலங்கையில் உள்ள பொதுநலவாய போர் கல்லறைகளையும் பார்வையிடவுள்ளார்.

இந்த மூன்று நாள்கள் உத்தியோகபூர்வ விஜயத்தில் பிரித்தானிய இளவரசி கண்டி மற்றும் கொழும்பில் உள்ள மத ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த தலங்களுக்கு செல்லவுள்ள்ஆர். தனது பயணத்தில் அப்பிரதேச சமூகங்கள் மற்றும் சிவில் சமூகப் பிரதிநிதிகளுடன் சந்திப்புகளை மேற்கொள்ளவுள்ளார். அத்துடன் இந்த பயணம் 2024 ஆம் ஆண்டு அரச குடும்பத்தின் முதல் வெளிநாட்டுப் பயணமாக அமையுமென்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இதற்கு முன்பதாக 1995 மார்ச் மாதம், 'சேவ் த சில்ட்ரன்' அமைப்பின் புரவலராக இளவரசியார் இலங்கைக்கு விஜயம் செய்தமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.



# ஈழவர்கள் குழுமம் 65 குடும்பங்களுக்கு பொங்கல் பொருள்கள் வழங்கிவைப்பு

(லியோ)

பிரித்தானியாவைத் தளமாகக் கொண்டியங்கும் ஈழவர்கள் குழுமத்தினால் தாயகத்தைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட 65குடும்பங்களுக்கு தைத்திருநாளுக்கான பொங்கல் பொருள்கள் நேற்று வழங்கிவைக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்தின் முள்ளியவளை வடக்கு மற்றும் புதறிகுடா பகுதிகளைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட 65குடும்பங்களுக்கே இவ்வாறு பொங்கல் பொருள்க வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

மேலும் முள்ளியவளை வடக்கு பொதுநோக்குமண்டபத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வு ஈழவர் குழுமத்தினுடைய தாயகக்கிளை ஒருங்கிணைப்பாளரும், முன்னாள் கரைதுறைப்பற்று பிரதேசசபை உறுப்பினருமான இரத்தினம் ஜெகதீசனின் ஒழுங்குபடுத்தலில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் விருந்தினர்களாக முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், சமூக செயற்பாட்டாளர்களான அன்ரனி ஜெயநாதன் பீற்றர்இளஞ்செழியன், ம.மரியஎனஸ்ரின், முள்ளியவளை வடக்கு கிராமஉத்தியோகத்தர் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர். ஈழவர் குழும தாயகக்கிளைச் செயற்பாட்டாளர்கள், கிராமமட்ட பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலரும் இதில் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.















# தமிழ் மக்களுக்குரிய தீர்வை வழங்க இயலாத அரச தலைவர் புன்னகைத்துப் படம் எடுக்கவா யாழ்., வன்னிக்கு வருகிறார்?

## கேள்வி எழுப்புகிறார் முன்னாள் மாகாணசபை உறுப்பினர் ரவிகரன்

**(விஜயரத்தினம் சரவணன்)**

தமிழ் மக்களுக்கான தீர்வுகளை வழங்க இயலாத ரணில் விக்கிரமசிங்க படங்கள் எடுப்பதற்காகத்தான் யாழிற்கும், வன்னிக்கும் வருகை தருகின்றாரா என முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

ரணில் விக்கிரமசிங்க தமிழர் பகுதிகளுக்கு வந்து சிரித்தபடி படம் எடுப்பதை மாத்திரம் செய்யாமல், நாட்டின் பொறுப்பு வாய்ந்த அரச தலைவராக, தமிழ் மக்களுக்குரிய தீர்வுகளை வழங்க முன்வரவேண்டுமெனவும் அவர் தெரிவித்தார்.

வவுனியா மாவட்ட வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத்தலைவி ஜெனிற்றா கைது செய்யப்பட்டமையைக் கண்டித்து நேற்று முன்தினம் முல்லைத்தீவில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் –

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வடக்கிற்கான விஜயத்தை மேற்கொண்டிருந்தபோது, கடந்த 05.01.2024 அன்று வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களுக்கான ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் வவுனியாவில் இடம்பெற்றிருந்தது.

இந்நிலையில் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் தமக்கான நீதியைக் கோரி, அந்தந்த மாவட்டங்களில் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர்.

அந்தவகையில் வவுனியாவில் இவ்வாறு வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டபோது, வவுனியா மாவட்ட வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத் தலைவி ஜெனிற்றா உள்ளிட்டவர்கள் மீது பொலிஸே தாக்குதல் மேற்கொண்டனர்.

அத்தோடு வவுனியா மாவட்ட வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளின் சங்கத் தலைவி பலவந்தமாக இழுத்துச்செல்லப்பட்டு கைதுசெய்யப்பட்டமையுடன் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். இது மிகவும் மோசமான செயற்பாடாகும்.

குறிப்பாக காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் விடயம், நில அபகரிப்பு, மதத் திணிப்புகள், கடலில் இடம்பெறும் அத்துமீறிய மற்றும் சட்டவிரோத கடற்றொழில் நடவடிக்கைகள், சிறையில் வாடும் அரசியல் கைதிகள் விடயம், தீர்வுத்திட்ட விடயம் என்பவற்றிற்கு இன்னும் உரிய தீர்வுகள் இல்லாத நிலை தொடர்கின்றது.

காணாமலாக்கப்பட்ட உறவுகளைப் பொறுத்தவரை அவர்கள் 2,500 நாள்களுக்கு மேலாக தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுவருகின்றனர். இவற்றுக்கான தீர்வுகளை வழங்க இயலாத ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, படம் எடுப்பதற்குத்தான் யாழிற்கும், வன்னிக்கும் வருகை தருகின்றாரா எனக் கேள்வி எழுப்ப விரும்புகின்றேன்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேர்தல் ஒன்றிற்கான பிரசார நடவடிக்கைக்காகவே இங்கு வருகை தந்து சென்றிருக்கிறார் என்றே பார்க்க முடிகின்றது.

இவ்வாறான சூழலில் ரணில் தற்போது நாட்டை எவ்வாறு வழிநடத்திச் செல்கின்றார் என்பதையும் பார்க்க வேண்டியுள்ளது.

பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து காணப்படுகின்றது, மக்கள் அன்றாட உணவிற்கே இடர்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

யுத்தம் மௌனிக்கப்பட்டு ஒன்றரை தசாப்தகாலம் கடந்துவிட்ட நிலையிலும், தமிழர்களுக்கான தீர்வு விடயத்தில் எவ்வித முன்னேற்றமும் இல்லாத கட்டம் தொடர்ந்தும் நீடிக்கின்றது.

முதலில் தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு தீர்வை வழங்கி விட்டு, இந்த நாட்டின் அரசுத் தலைவராக வடக்கு, கிழக்கிற்கு வாருங்கள்.

இங்கு வந்து சிரித்தபடி படம் எடுப்பதை மாத்திரம் செய்யாமல், நாட்டின் பொறுப்புவாய்ந்த அரச தலைவராக தமிழ் மக்களுக்குரிய தீர்வை நீங்கள் வழங்க வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு.

அத்தோடு கைதுசெய்யப்பட்ட வவுனியா மாவட்ட வலிந்துகாணாமலாக்கப்பட்ட உறவுகளின் சங்கத் தலைவி உடனடியாக விடுவிக்கப்படவேண்டும்.

அதேவேளை பொலிஸாரின் அடக்குமுறைச் செயற்பாட்டிற்கு வன்மையான கண்டனங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

குறிப்பாக அரசதலைவர் உள்ளிட்ட அரசாங்கத்தின் உயர் பீடங்களில் இருப்பவர்கள் பொலிஸ் உள்ளிட்ட அரச இயந்திரங்களைப் பயன்படுத்தி தற்போது அடக்குமுறைகளைப் பிரயோகிக்கின்றனர்.

விடுதலைப் புலிகளின் காலத்தில் இவ்வாறான அடக்குமுறைச் செயற்பாடுகள் இருந்ததில்லை என்பதை இங்கு சுட்டிக்காட்டவிரும்புகின்றேன்.

விடுதலைப் புலிகள் எமது கடல் வளம், நிலவளம் என்பவற்றைப் பாதுகாத்தமையுடன், தமிழர்களின் தீர்வு விற்காக அவர்கள் போராடினார்கள்.

இந் நிலையில் தற்போது அரசால் தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்படும் மிக மோசமான அடக்குமுறைகளை இனங்கண்டு, தமிழர்களுக்கான தீர்வினைப் பெற்றுத்தருவதற்கு சர்வதேசம் தலையீடு செய்ய வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன் – என்றார்.



# கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தை பொது வேட்பாளராக நிறுத்தலாம்!

## இப்படிக் கூறுகின்றார் சி.வி.விக்னேஸ்வரன்

- எஸ்.நிதர்ஷன்-

ஜனாதிபதி தேத்தலில் தமிழர் சார்பில் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தை பொது வேட்பாளராக நிறுத்தலாம் என்று கூறியிருக்கின்றார் தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி. விக்கினேஸ்வரன்.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஜனாதிபதி தேத்தலில் தமிழர் சார்பில் பொது வேட்பாளராக ஒருவரை முன்னிறுத்துவது தான் நல்லது என்பது எங்களது காட்சியின் நிலைப்பாடாக இருக்கிறது. அதிலே யாரை நிறுத்துவது என்பது பற்றி இப்போது என்னால் கூற முடியாது.

ஆனாலும் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தை பொது வேட்பாளராக நிறுத்தலாம் என்று கூறியிருக்கின்றேன். ஏனெனில் அவருக்குத் தான் மூன்று மொழிகளும் தெரிந்து இருக்கின்றபடியால் அவரைப் நிறுத்தலாம் என நினைக்கிறேன்.

ஆனால் அவர் தானே ஜனாதிபதித் தேர்தலைப் பகிஷ்கரிக்க வேண்டும் என்ற வாறாக தற்போது சொல்லிக் கொண்டிருக்கின்றார். எனினும் பகிஷ்கரிப்பது என்ற அவருடைய இந்தச் சிந்தனை பிழையானது என்பதை நான் சுட்டிக்காட்டி வருகின்றேன்.

அதேபோன்று பல்கலைக் கழகத்தில் சட்ட விரிவுரையாளர் கோசலை மதன் என்பவரும் இருக்கிறார். ஆனாலும் அவருடனும் நாங்கள் இது தொடர்பில் பேசவில்லை. இப்படியாக எம் மத்தியில் பலர் இருக்கின்றார்கள் என்று நினைக்கின்றேன். அவ்வாறு நிறுத்தக் கூடியவர்களில் மூன்று மொழிகளும் தெரிந்த ஒருவரைத் தெரிவதுதான் நல்லது.

இதேவேளை தேர்தல் தொடர்பிலோ அல்லது பொது வேட்பாளர் தொடர்பிலோ தமிழ் கட்சிகளுக்கு இடையிலே இதுவரையிலும் பேசப்படவில்லை. தமிழரசுக் கட்சியின் தலைவர் தேர்வு நடைபெற இருக்கிற காரணத்தால் அதன் பின்னர் இந்த விடயங்களைப் பற்றி பேசிக் கொள்ளலாம் என்ற நிலைப்பாட்டில் ஏனைய பல கட்சிகளும் இருக்கின்றன.

குறிப்பாக கஜேந்திரகுமாரிற்கு மூன்று மொழிகளும் தெரியும். எங்களுடைய பிரச்சினைகளையும் நன்றாக அறிந்தவர் என்பதாலும், சிங்கள மக்களிடத்தேயும் எங்களுடைய பிரசாரங்களை எடுத்துக் கூறக்கூடிய நல்லதொரு வல்லமை அவரிடம் இருக்குமென்று நான் நம்புகின்றேன். இதனாலேயே அவரைப் பொது வேட்பாளராக நிறுத்தலாம் என்று கூறுகிறேன்.

தமிழிலும் ஆங்கிலத்திலும் அவர் இதனை எடுத்துக் கூறுவதால் பல நாடுகளும் நமது பிரச்சினைகளை அறிந்து, "தெரிந்து கொள்வார்கள் என நினைக்கிறேன். அடுத்ததாக அவர் ஒரு இளைஞர். அவர் பேசுவதை காது கொடுத்து கேட்பார்கள் என்று நம்புகிறேன். அவர் அதற்கு தகுதி உடையவர் என்ற நிலையிலேயே தான் நான் இதனை குறிப்பிட்டு இருக்கின்றேன்.

ஆனாலும் கட்சி ரீதியாக எங்களுக்கு அவரோடு பல பிரச்சினைகள் இருக்கின்றன. ஆனால் எங்களுடைய மக்களுக்கு எது நன்மை பயக்கும் என்பதை அறிந்து தான் நடவடிக்கைகளுக்கு இறங்க வேண்டும். அந்த அடிப்படையில் தான் நான் கஜேந்திரகுமாரின் பெயரை குறிப்பிட்டு இருக்கின்றேன். – என்றார்.

பொது வேட்பாளர் ஒருவரை கொண்டு வருகின்றதால் எமக்கு பல நன்மைகள் இருக்கின்றன.

முதலாவதாக தமிழ் மக்கள் சார்பில் பொது வேட்பாளராக ஒருவரை நிறுத்தினால் நம் மக்களுக்கு ஏற்பட்ட பிரச்சினைகளை அவர்கள் பட்ட கஷ்ட, துன்ப, இழப்புக்களையும் எமக்கு தேவையானவற்றையும் சிங்கள மக்களுக்கும் எடுத்து கூறக் கூடிய நிலைமை ஏற்படலாம்.

அதனால்தான் சிங்களம் உட்பட மும்மொழியும் தெரிந்த ஒருவரை வேட்பாளராக முன் நிறுத்த வேண்டும் என நான் கூறுகின்றேன். அதே போன்று ஆங்கிலத்திலும் வெளி நாடுகளுக்கு எடுத்து கூற முடியும்.

அதிலும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுகிறபோது தொலைக் காட்சிகளில் குறிப்பிட்ட நேரங்களை ஒதுக்குவார்கள். அந்த நேரங்களில் மக்களுடைய பிரச்சினைகளை அனைவரும் பார்க்கத்தக்கதாக வெளிப்படுத்தக் கூடியதாக இருக்கும்.

தமிழ் மக்கள் சார்பில் ஒருவர் வருகிறார் என்றால் அதனை தமிழ்க் கட்சிகள் ஒன்று சேர்ந்து செய்தால் தான் அதனால் நன்மை வரக்கூடியதாக இருக்கும். அவ்வாறு கட்சிகளுக்கு இடையிலான அந்த ஒற்றுமை என்பது தமிழ் மக்களையும் ஒருமித்து ஒற்றுமையாக சேர்க்க கூடும்.

எங்களுடைய பல பிரச்சினைகள் சிங்கள மக்களுக்குத் தெரியாத நிலைமை இருக்கின்றது. ஆகவே உத்தியோகபூர்வமாக இங்கு நடப்பவற்றையும் நமது பிரச்சினைகளையும் நாம் இலகுவாக தெரியப்படுத்தலாம்.

அவ்வாறு ஒருவரை நிறுத்தி தமிழ் மக்களுடைய அந்த ஆணையை நாங்கள் ஒற்றுமையாக ஒருமித்து பெறுவோமாக இருந்தால் 50 வீத ஆணை தெற்கில் வராது. அவ்வாறு நாங்கள் ஒருமித்து செயற்படுவோமாக இருந்தால் பேரம் பேசுகின்ற ஒரு முக்கிய நிலைமை வரக்கூடும். அந்தப் பேரம் பேசலை நாங்கள் வெளிப்படையாகப் பேசிக் கொள்ள வேண்டும்.

இவை எல்லாவற்றையும் கணித்துத்தான் ஒரு பொது வேட்பாளரை நாங்கள் அனைவருமாக இணைந்து நிறுத்த வேண்டும் என்று நான் கூறுகின்றேன். – என்றார்.

# இன்றைய ராசி பலன்கள் - 10.01.2024




கோவிலுக்கு செல்லுதல் மற்றும் பக்தி ஈடுபாடு இன்று உங்களுக்கு நன்மை அளிக்கும். தியானம் மேற்கொள்வது சிறந்தது.

இன்று பணியில் மூழ்கி இருப்பீர்கள். நீங்கள் செய்யும் பணியில் அறிவாற்றல் பெறுவதன் மூலம் நன்மை விளையும்.

உறவில் பொறுமையை கடைபிடியுங்கள். பெரியவர்களின் ஆலோசனை கேட்பது சிறந்தது.

இன்று பணப்புழக்கம் குறைந்து காணப்படும். பணப் பரிவர்த்தனைகளை சிறப்பான முறையில் ஆவணங்களில் பராமரிக்க வேண்டும்.

தலை வலி மற்றும் உயரமுத்தம் காரணமாக ஆரோக்கியம் சிறிது பாதிக்கப்படும்.




இன்று பிரார்த்தனை சிறந்த பலனளிக்கும். இந்து முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

பணியிடத்தில் இது மகிழ்ச்சியான நாளாக இருக்காது. நீங்கள் தவறு செய்ய வாய்ப்புள்ளது. எனவே கவனமாக இருக்கவும்.

குடும்பத்தில் சில குழப்பங்கள் காணப்படும். உங்கள் தனிப்பட்ட விஷயங்களில் கவனம் செலுத்த வேண்டும்.

இன்று அதிக செலவுகள் காணப்படும். சேமிப்பு பழக்கத்தை மேற்கொள்வது சிறந்து.

கண்களில் எரிச்சல் மற்றும் தோள் வலி போன்ற பாதிப்புகள் காணப்படும். உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.




உங்களுக்கு வளர்ச்சி தரும் பயனுள்ள செயல்களில் பங்கு கொள்ளுங்கள். பங்கு வர்த்தகம் உங்களுக்கு நல்ல லாபம் தரும்.

பணியிடச் சூழல் சாதகமாக இருக்கும். நீங்கள் உங்கள் பணிகளை சிறப்பாக ஆற்றுவீர்கள். பணியில் நற்பெயர் பெறுவீர்கள்.

குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். இன்று உற்சாகத்தையும் காதல் உணர்வையும் அனுபவிப்பீர்கள்.

இன்று ஆன்மீக காரியங்களுக்கும் தொண்டுகள் செய்வதற்கும் பணத்தை செலவு செய்யுங்கள். இது உங்களுக்கு மிகுந்த திருப்தி அளிக்கும்.

இன்று சிறந்த ஆரோக்கியத்தை பாரமாரித்து மகிழ்ச்சி யுடன் இருப்பீர்கள்.




உங்கள் அனைத்து முயற்சிகளும் வெற்றியை பெற்றுத் தரும். நீங்கள் அதிக அறிவாற்றலை பெறுவீர்கள்.

உங்களிடம் தொழில் சார்ந்த அணுகுமுறை காணப்படும். இதனால் பணியில் திறம்பட செயலாற்றுவீர்கள். சரியான அணுகுமுறை மேற்கொள்வதன் மூலம் மகிழ்ச்சியும் வளர்ச்சியும் காணப்படும்.

குடும்பத்தில் இணக்கம் காணப்படும். குடும்ப உறுப்பினர்களின் ஆதரவு உங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும்.

இன்று சாதகமான நிதிநிலை காணப்படும். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்துகொள்ள போதிய பணம் காணப்படும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நீங்கள் ஆரோக்கியத்தை சிறப்பாக பராமரிப்பீர்கள்.




இன்றைய நாள் பரபரப்பாக இருக்கும். யோகா அல்லது தியானம் மேற்கொள்வதன் மூலம் அமைதி மற்றும் நன்மை விளையும்.

இன்று தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளதால் கவனமாக பணியாற்றவும். உங்கள் அறிவுத்திறன் பயன்படுத்தி பணியாற்றவும்.

குழந்தைகளின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றம் குறித்த கவலை காணப்படும். இது நல்லுறவிற்கு ஏற்ற நாள் அல்ல.

இன்று பண இழப்பிற்கான சாத்தியம் உள்ளது. பணத்தை எச்சரிக்கையாக கையாளவும்.

இன்று முதுகுவலி மற்றும் தலை வலி பாதிப்பு காணப்படும். ஆரோக்கியத்தில் கவனம் தேவை.




இன்று பலன்கள் கலந்து காணப்படும். சில தடைகளைக் கடந்து பணியில் வெற்றி பெறுவீர்கள். இன்று அதிக முயற்சி எடுக்க வேண்டும்.

இன்று விவாதங்கள் ஏற்படும் என்ற காரணத்தால் உங்கள் துணையுடனான உறவு மகிழ்சிகரமாக இருக்காது. நீங்கள் அனுசரித்துப் போவதன் மூலம் நன்மை பெறலாம்.

பண வரவுடன் செலவும் இணைந்து காணப்படும். உங்கள் தேவைகளை முன்னுரிமைப் படுத்தி அதன்படி செயலாற்றுங்கள்.

தலை வலியால் இன்று நீங்கள் அவதிப்பட நேரலாம். ஆரோக்கியத்திற்காக பணம் செலவு செய்ய நேரும். தியானம் மேற்கொள்வதன் மூலம் ஆறுதல் பெறலாம்.




உங்கள் தேவை அறிந்து அமைதியாக செயல்படுங்கள். உடனடியாக உங்கள் விளைவுகளுக்கு பலன் கிடைக்காவிடில் நம்பிக்கை இழக்காதீர்கள்.

வேலை தொடர்பான பயணம் காணப்படும். உங்கள் சக பணியாளர்களுடன் நல்லுறவு காணப்படாது.

உங்கள் உறவில் நல்லிணக்கம் குறைந்து காணப்படும். உங்கள் வீட்டு பெரியவர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபடுவீர்கள்.

இன்று நிதிநிலைமை மகிழ்சிகரமாக இருக்காது. கணிசமான இருப்பை பராமரிக்க தடைகளை எதிர் கொள்வீர்கள்.

பெரியவர்களின் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. அவர்களின் நலத்திற்காக பணம் செலவு செய்ய நேரும்.




பொதுவாக இன்று சிறப்பான நாள். உங்கள் கடின உழைப்பை நம்புங்கள். உங்கள் நேர்மையான முயற்சி மூலம் உங்களுக்கு வெற்றி கிடைக்கும்.

உங்கள் தன்னம்பிக்கை மற்றும் உறுதி மூலம் தடைகளை சமாளிப்பீர்கள். பனியின் மூலம் நன்மை பெறுவீர்கள்.

உங்களின் பிரியமானவர்களுடன் பேசும் போது கவனமாக உரையாற்றும் திறன் வேண்டும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக உள்ளது. இன்று பணவரவு காணப்படும்.

சூடு சம்பந்தமான பிரச்சினைகள் மற்றும் தோல் பிரச்சினைகள் ஏற்படலாம். சரிவிகித உணவை மேற்கொள்ளுங்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 10.01.2024




கேளிக்கை மற்றும் பொழுதுபோக்கு நிகழ்சிகள் உங்களுக்கு புத்துணர்ச்சி அளிக்கும். அதிகமாக சிந்திப்பதை தவிர்த்திடுங்கள்.

பணியிடச் சூழல் மகிழ்ச்சிகரமாக காணப்படாது என்றாலும் கடவுள் அருளால் தடைகளைத் தாண்டி முன்னேறுவீர்கள்.

உங்கள் உறவில் குழப்பம் நேரலாம். எனவே வேறுபாட்டை களைந்து மகிழ்ச்சியை பராமரிக்கவும்.

நீங்கள் எதிர்பார்த்த வகையில் நிதிநிலைமை காணப்படாது. பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது.

பதட்டம் மற்றும் பாதுகாப்பின்மை உணர்வு உங்கள் ஆரோக்கியத்தை பாதிக்கும் தோல் எரிச்சல் போன்ற பாதிப்புகளும் ஏற்படலாம்.




இன்று நன்மை விளையும் நாள். இன்று எடுக்கும் முக்கிய முடிவுகள் நன்மை அளிக்கும். சில விருப்பங்கள் இன்று நிறைவேறலாம்.

உங்கள் பணிகளை திறம்பட ஆற்றுவீர்கள். அது உங்கள் மேலதிகாரிகளின் கவனத்தை ஈர்க்கும். உங்கள் பணிக்கு அங்கீகாரம் கிடைக்கும்.

உங்கள் உறவில் மகிழ்ச்சியும் நல்ல பிணைப்பும் காணப்படும். குடும்பத்துடன் மகிழ்ச்சியாக இந்த நாளை கொண்டாடுவீர்கள்.

இன்று பணம் அதிகமாக காணப்படும். அதனை நீங்கள் பயனுள்ள வகையில் பயன்படுத்துவீர்கள்.

இன்று உங்களுக்கு ஆரோக்கியப் பிரச்சினை ஏதும் காணப்படாது.




உங்கள் தேவையின் முன்னுரிமை அறிந்து அதன்படி செயல்படுங்கள். அதிக பொறுப்புகள் காரணமாக மும்மரமாக இருப்பீர்கள்.

பணியிடத்தில் சூழ்நிலை சாதகமாக இருக்காது. தகவல் தொடர்பு குறைபாடு காரணமாக சக பணியாளர்களுடன் அமைதியின்மை காணப்படும்.

இன்று உங்கள் துணையுடன் நல்லுறவு காணப்படாது. தேவையற்ற மோதல்கள் ஏற்பட வாய்ப்புள்ளது.

உங்கள் குடும்பத்திற்காக நீங்கள் பணம் செலவு செய்ய நேரும். தேவையற்ற செலவுகளை கண்காணிக்கவும்.

கால் வலி மற்றும் தலை வலி பாதிப்பு ஏற்படலாம். ஓய்வாக இருங்கள்.




இன்று நீங்கள் அதிக நேரம் செயல்பட வேண்டியிருக்கும். அதிக பொறுப்புகள் காரணமாக இன்று நீங்கள் பணியில் மூழ்கியிருப்பீர்கள்.

பணிகளை திட்டமிட்டு ஆற்ற வேண்டும். உங்கள் நேரம் மற்றும் ஆற்றலை நன்கு பயன்படுத்த வேண்டும்.

குடும்பத்தில் சூடான விவாதங்கள் காணப்படும். அமைதியும் பொறுமையும் மேற்கொள்ள வேண்டியது அவசியம்.

நிதிநிலையில் ஏற்றத்தாழ்வு காணப்படும். இன்று அதிக செலவுகளை எதிர் கொள்ள நேரும்.

அதிக பதட்டம் காரணமாக தலை வலி ஏற்பட வாய்ப்புள்ளது. ஆரோக்கியத்தில் கவனம் தேவை.




Discover the Ultimate Investment & Dynamic Destinations which Redefines the Face of Luxurious Living

OUR ONGOING PROJECTS
- No.06, 19th Lane, Colombo 03.
- No. 15A, Layards Rd, Colombo 04.
- No.30, Hotel Road, Mount Lavinia.
- No. 02, Glenfall Road, Nuwara Eliya.
- No.01, Havelock Place, Colombo 05.
- No. 34/2, De Saram Road, Mount Lavinia.
- No. 358, High Level Road, Nugegoda.
- No. 35, Ramakrishna Road, Colombo 06.



Blue Ocean GROUP OF COMPANIES
KELSEY HOMES 40 Years Housing Excellence
+94 777 546 546 +94 770 774 774
LARGEST PROPERTY DEVELOPER IN SRI LANKA
No. 9A, De Fonseka Place, Colombo 04, Sri Lanka.

Northern PC Park



வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co
Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park  Npcpark  northernpcpark  Northern PC Park




# அழிக்க முடியாத கறையாக தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலை!

## 1974 - 2024

**(தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலை இடம்பெற்று இன்றுடன் 50 ஆண்டுகள் நிறைவடைகின்றன. 10 ஜனவரி 1974 ஆம் ஆண்டு தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலை இடம்பெற்றது. இன்று (10.01.2024) 50 ஆவது ஆண்டு நினைவு நிகழ்வைத் தமிழர் தாயகம் அனுஷ்டிக்கிறது.)**

**- ஜங்கரன் விக்கினேஸ்வரா -**

ஒரு இனத்தை அழிக்கும் முன்னர் அதன் சுவடுகளை அழி, அடையாளத்தை அழி என்பதே எதிரிகளின் போர் உபாயமும், தந்திரமுமாகும். அதற்கு ஒப்பாக, ஈழத்தில் தமிழர் கலாச்சாரப் படுகொலையின் ஆரம்பம்தான் 1974 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலையாகும்.

சிறிமா அரசின் இனபாகுபாடு தமிழ் மரபையும், வரலாற்றையும் காத்து நிகழ இருந்த, தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலை, தமிழ் மக்களின் வரலாற்றில் என்றுமே அழிக்க முடியாத கறையாகியுள்ளது.

இலங்கை அடக்குமுறை அரசுகளின் தொடர்ச்சியான 1958, 1977, 1983 இல் நிகழ்ந்த திட்டமிடப்பட்ட இனக்கலவரங்களால் தமிழர்களின் பொருளாதார வளங்களும், அறிவியல், பண்பாட்டு நிலையங்களும் அழித்து நாசமாக்கப்பட்டன. தமிழர் கலாச்சாரத்தை அழிக்க நிகழ்ந்த பண்பாட்டுப் படுகொலைதான் தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலையாகும்.

ஈழத்தில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதி தினமான ஜனவரி 10, 1974 இல் மாநாட்டில் கலந்து கொண்டவர்களில் ஒன்பது பேர் இலங்கை பொலிஸாரின் துப்பாக்கிப் பிரயோகத்தால் உயிரிழந்தனர்.

சிங்கள பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் மின் கம்பிகள் அறுந்து மக்கள் திரண்டிருந்த இடத்தில் விழுந்தமை, ஆயிரக் கணக்கில் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் எனத் திரண்டிருந்த தமிழ் மக்கள் மத்தியில் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசியமை, இரவு நேரத்தில் ஏற்பட்ட இந்தக் குழப்பத்தால் நிகழ்ந்த விபத்துகள் இந்த மரணங்களுக்குக் காரணமாயின.

உலகளாவிய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த இந்த மாநாட்டை யாழ்ப்பாணத்தில் நடத்தவிடாமல் அப்போதைய சிறிமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான அரசு, பொலிஸாரை அனுப்பிக் கலவரத்தை ஏற்படுத்தியது.

இதன்போது ஒன்பது தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர். அதுட்டுமன்றித் தமிழர்கள் மனத்தில் நீங்காத வடுக்களாக - கறையாக - இந்தப் படுகொலைச் சம்பவம் பதியப்பட்டது.

### மேயர் அல்பிரட் துரையப்பாவின் வஞ்சகம்

யாழ்ப்பாணத்தில் தமிழராய்ச்சி மாநாடு நடைபெறுவதை அப்போது ஆட்சியிலிருந்த சிறிமாவோ அரசு விரும்பவில்லை. அரசு இதனை

தொடர்ச்சி ▼

# அழிக்க முடியாத கறையாக தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலை!


விழாக் கோலத்தில் யாழ் நகர் 1974 தை

தொடர்ச்சி▲

ஏற்றுக்கொள்ளாது கொழும்பில் நேரடியாகவும், யாழ்ப்பாணத்தில் மாநகர மேயர் ஊடாகவும் தொடர்ச்சியான தடைகளை ஏற்படுத்தியது. அத்துடன் மாநாடு நடைபெறுவ


10.01.1974
தமிழ்மீது காதல்கொண்டனர்
கொலை வெறிக்காளாகி மாண்டனர்.

சி. நந்தகுமார் | வே. கேசவராசன் | ப. சரவணபவன்
இ. சிவானந்தம் | வ. யோகநாதன் | இ. தேவரட்ணம்
பி. சிக்மாறிலிங்கம் | இ. ஆறுமுகம் | சி. பொன்னுத்துரை

இலங்கையில் நடைபெற்ற நான்காம் அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதி நாளன்று, சிங்கள அரசின் காவற் படையினரின் காட்டுமிராண்டித்தனத்திற்குப் பலியான ஒன்பது தமிழர்கள்.

தற்கான முக்கிய அரங்குகளின் அனுமதி இறுதி நேரம் வரை மறுக்கப்பட்டிருந்தது.

அத்துடன் மாநாட்டில் கலந்து கொள்ளவிருந்த பல வெளிநாட்டு அறிஞர்களுக்கு விசா மறுக்கப்பட்டது. இவைகள் எவ்வாறு இருந்தாலும், மாநாட்டைச் சிறப்பாக நடத்த வேண்டும் என்ற மனவெழுச்சி அமைப்பாளர்களிடமும், மக்களிடமும் இருந்தது. மக்கள் அலை அலையாகத் திரண்டதைக் கண்ட சிங்கள அரசு சற்றுக் கீழிறங்கி மட்டுப்படுத்தப்பட்ட அளவில் வெளிநாட்டு அறிஞர்களுக்கு விசா வழங்கியது.

அதேவேளை, மாநாட்டுக் குழுத் தலைவர் அன்றைய நீதியாளர் தம்பையா, மாநாட்டை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு விரும்பவில்லை. ஆகையால் அவர் தலைவர் பதவியிலிருந்து விலக, பேராசிரியர் சு.வித்தியானந்தன் தலைமையில் தமிழாராய்ச்சி மாநாடு மூன்றாம் திகதி ஆரம்பமாகிப் பத்தாம் திகதி வரை யாழ்ப்பாணம் முற்றவெளி திறந்த வெளியரங்கில் சிறப்பாக நடைபெற்றது.

கோலாகலம் பூண்டிருந்த யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளில் இருந்தும் லட்சக் கணக்கான மக்கள் யாழ். நகரத்துக்கு வந்தார்கள். அதுவரை நடைபெற்ற எந்தவொரு மாநாடும் இதுபோல சிறப்பாக நடைபெறவில்லை. ஜனவரி 10ஆம் திகதி மாநாட்டுக்கு வருகை தந்திருந்த அறிஞர்கள் கௌரவிப்பு மற்றும் விருது வழங்கல் என்பவற்றை யாழ். திறந்த வெளியரங்கில் நடத்தத் திட்டமிடப்பட்டிருந்தது. அன்றைய தினம் குடாநாடு விழாக்கோலம் பூண்டிருந்தது.

ஆனாலும் இந்த நிகழ்வைத் தடுக்கும் வண்ணம் அப்போது மேயராக இருந்த, சிறிமாவின் ஆதரவாளர் அல்பிரட் துரையப்பா யாழ். திறந்த வெளியரங்கில் நிகழ்வுகளை நடத்தவும் அனுமதிமறுக்கும் முகமாக அந்தத் திறந்த வெளியரங்கம் மூடப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

இதனால் நிகழ்வுகள் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் ஆரம்பமாகின. பல்லாயிரக் கணக்கில் மக்கள் வருகைதந்திருந்த நிலையில் வீரசிங்கம் மண்டபம் மக்கள் கூட்டத்தால் நிரம்ப, ஏனைய பொது மக்கள் வீரசிங்க மண்டபத்துக்கு முன்பாகவும் யாழ். முற்றவெளியிலும் தங்கியிருந்தனர்.

## இறுதி நாள் நிகழ்வு

1974 ஆம் ஆண்டு ஜனவரி பத்தாம் திகதி இறுதி நாளாகக் கொண்டாடப்பட்டது. இறுதி நிகழ்வாக அறிஞர்கள் தமிழின் பெருமைகளையும், ஈழப் பண்பாட்டின் பெருமையையும் பற்றிப் பேசினார்கள்.



ஈழத் தமிழ் மக்கள் உணர்வோடு கைதட்டி உற்சாகப்படுத்தினர். இறுதியாகத் தமிழகப் பேராசிரியர் “நைனா முகமது” பேசிக் கொண்டிருக்கும் போது, யாழ். உதவிப் பொலிஸ்மா அதிபர் சந்திரசேகரா தலைமையிலான பொலிஸார் மாநாட்டில் கலந்து கொண்டிருந்த மக்களைத் தாக்கியதுடன், துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொண்டனர்.

இந்தச்சம்பவத்தில் ஒன்பது பொது மக்கள் உயிரிழந்தனர். பல தமிழ் மக்கள் காயமடைந்தனர். நிகழ்ச்சி அரங்குகள் சேதமடைந்தன.

இந்த மாநாட்டைக் குழப்பிய யாழ். உதவிப் பொலிஸ்மா அதிபர் சந்திரசேகரா பின்னர் சிறிமாவோ பண்டார நாயக்காவால் பொலிஸ் அத்தியட்சகராகப் பதவி உயர்த்தப்பட்டார்.

தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதி நாளான 10.01.1974 அன்று கொல்லப்பட்டவர்களின் விவரம் வருமாறு,

வேலுப்பிள்ளை கேசவராஜன் (வயது - 15 - மாணவன்), பரம்சோதி சரவணபவன் (வயது - 26), வைத்தியநாதன் யோகநாதன் (வயது - 32), ஜோன்பிடலிஸ் சிக்மறிங்கம் (வயது - 52 - ஆசிரியர்), புலேந்திரன் அருளப்பு (வயது - 53), இராசதுரை சிவானந்தம் (வயது - 21 - மாணவன்), இராஜன் தேவரட்ணம் (வயது - 26), சின்னத்துரை பொன்னுத்துரை (வயது - 56 - ஆயுள் வேத வைத்தியர்), சின்னத்தம்பி நந்தகுமார் (வயது - 14 - மாணவன்) ஆகியோர் இந்த மாநாட்டில் களப்பலியாகினர்.

இந்த இறப்புகளின் பின்னர் தீவிரமாக வெளிப்பட்ட தமிழ்த் தேசியவாத போக்கால், ஈழப் போராட்டம் பின்னர் தீவிரமாக வளர்ச்சியுறத் தொடங்கியது.

50 ஆவது ஆண்டு நினைவுகளில் தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலையை இன்று 10 ஜனவரி 2024 தமிழர் தாயகம் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கிறது.

தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலை தமிழ் மக்களின் வரலாற்றில் என்றுமே அழிக்க முடியாத வடுவை உருவாக்கியுள்ளது.




# மட்டக்களப்பில் வெள்ளத்தில் ஒருவர் காணாமல் போயுள்ளார்

## 2,291 குடும்பங்கள் பாதிப்பு; பல பிரதேசங்களில் போக்குவரத்துத் துண்டிப்பு

**(கனகராசா சரவணன்)**

மட்டக்களப்பில் சீரற்ற கால நிலை மற்றும் பெய்துவரும் அடை மழை காரணமாக மாவட்டத்திலுள்ள தாழ் நிலப்பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கி யுள்ளன. சில பிரதேசங்களுக்கான போக்குவரத்துத் துண்டிக்கப்பட்டுள்ளது. 2,291 குடும்பங்கள் பாதிக்கப்பட்டு, உறவினர் வீடுகளிலும் இடைதாங்கல் முகாம்களில் தஞ்சமடைந்துள்ளன. வவுணதீவு ஆற்றில் மீன்பிடிக்கச் சென்ற ஒருவர் காணாமல் போயுள்ளார். தாழ் நிலப் பகுதிகளில் உள்ளோரையும், போக்குவரத்தில் ஈடுபடுவோரையும் அவதானமாக இருக்குமாறு மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு அறி வுறுத்தியுள்ளது.

மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு நேற்று செவ்வாய்க்கிமை பிற்பகல் ஒரு மணிக்கு வெளியிட்டுள்ள அறிக் கையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் 123.3 மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மாநகர சபைக்கு உட்பட்ட சின்ன ஊறணி, இருதயபுரம், கருவேப்பங்கேணி, கூழா வடி, மாமாங்கம், கல்லடி, வேலூர், நாவற்குடா பகுதிகளில் வெள்ளம் ஏற்பட் டுள்ளது. ஆலயங்கள் மற்றும் பல வீடுகள் வெள்ள நீரில் மூழ்கியுள்ளன.

கிரான் பிரதேச செயலகப் பிரிவி லுள்ள கிரான் பாலத்தின் மேலால் வெள்ளநீர் ஓடுவதால் கிரானுக்கும் புலிபாய்ந்தகல் பிரதேசத்துக்கும் இடையிலான் போக்குவரத்துத் துண்டிக் கப்பட்டுள்ளது. அதனால் படகுச்சேவை முன்னெடுக்கப்பட்டுள்ளது. வாகரைக் கும் கல்லரிப்பு பிரதேசத்துக்குமான போக்குவரத்து துண்டிக்கப்பட்டதை யடுத்து டிராக்டரில் போக்குவரத்து முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை வெள்ளத்தினால் செங்கலடி பிரதேச செயலகப் பிரி வில் 115 குடும்பங்களும், மண்முனை வடக்கு பிரதேச செயலகப் பிரிவில் 33 குடும்பங்களும். களுவாஞ்சிக்குடியில் 7 குடும்பங்களும், பட்டிப்பளை பிரதேச செயலகப் பிரிவில் 10 குடும்பங்களும், போரதீவுபற்று பிரதேச செயலகப் பிரிவில் 290 குடும்பங்களும், வாகரையியில் 393 குடும்பங்களும், காத்தான்குடி பிரதேச செயலகப் பிரிவில் 1,498 குடும்பங்களும் உறவினர் வீடுகளில் தஞ்சடைந்துள்ளன.

காத்தான்குடியில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட 7 குடும்பங்கள் பதுரியா வித்தியாலயத்திலும், செங்கலடியில் பாதிக்கப்பட்ட 27 குடும்பங்கள் ஏறாவூர் கோவில் மணிமண்டபத்திலும் தங்க வைக்கப்பட்டுள்ளன. வவுணதீவு ஆற்றில் மீன்பிடிக்க சென்ற ஒருவர் காணாமல் போயுள்ளார். அவரைத் தேடும் நடவ டிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. மழை காரணமாக மாவட்டத்திலுள்ள பெரிய குளங்களின் வான்கதவுகள் திறக் கப்பட்டுள்ளன. ஆற்று வெள்ளம் காரண மாக தாழ் நிலப் பகுதிகளில் உள் ளோரையும், போக்குவரத்தில் ஈடுபடு வோரையும் அவதானமாக இருக்குமாறு மேற்படி அறிக்கையில் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

# மட்டு. ரயில் நிலையமும் வெள்ளத்தில் மூழ்கியது!



**(எஸ்.எஸ்.அமிர்தகழியான் - மட்டக்களப்பு**

தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக, மட்டக்களப்பு மாவட்டத்தின் பல பிரதேச செயலாளர் பிரிவுகளின் தாழ் நிலப் பிரதேசங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

தொடர்ச்சியாக பெய்துவரும் மழை யால் மட்டக்களப்பு ரயில் நிலையமும் வெள்ளத்தில் மூழ்கிக் காணப்படு கின்றது.

தற்போதைய நிலையில் ரயில் பயணங்கள் இடம்பெற்றாலும், வெள்ள நீர் அதிகரிக்குமாயின் ரயில் போக்கு வரத்தை மேற்கொள்வதில் சிரமம் ஏற் படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.




# பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு மதங்களுக்கு இடையில் ஒற்றுமை அவசியம்

## வலியுறுத்துகின்றார் வடக்கு ஆளுநர்



(நிதர்ஷன்)

பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப மதங்களுக்கு இடையிலான ஒற்றுமை அவசியம் என வடக்கு மாகாண ஆளுநர் தெரிவித்துள்ளார்.

நாட்டில் இன நல்லிணக்கம் கட்டியெழுப்பப்படும் சூழ்நிலையில், மதங்களிடையே ஒற்றுமையை சீர்குலைக்கும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன என வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் தெரிவித்தார்.

மத நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் முகமாக, வழிபாட்டு தலங்களுக்கான அன்பளிப்புகளை வழங்கும் போதே ஆளுநர் இதனைக் கூறினார்.

வடக்கு மாகாண ஆளுநரின் ஒதுக்கீட்டின் கீழ் மத வழிபாட்டுத் தலங்களுக்கான அன்பளிப்புகளை கையளிக்கும் நிகழ்வு வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் நேற்று நடைபெற்றது.

நல்லூர் வடக்கு சந்திரசேகர பிள்ளையார் கோவில், ஆவரங்கால் சிவன் கோவில், யாழ்ப்பாணம் ஸ்ரீ நாக விகாரை, இளவாலை புனித பிலிபேரிஸ் தேவாலயம் ஆகியவற்றுக்கான அன்பளிப்புப் பொருள்கள் ஆளுநரால் வழங்கிவைக்கப்பட்டன.

அன்பளிப்பு பொருள்களை வழங்கிவைத்த ஆளுநர், வருகைதந்த மத குருமார்கள் மற்றும் ஆலய நிருவாகத்தினருடன் கலந்துரையாடினார். மதங்களிடையே பூசல் உருவாக இடமளிக்கக் கூடாது எனவும், பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப மத ஒற்றுமை அவசியம் எனவும் கூறினார்.

ஆளுநரின் கருத்துக்களை கேட்டறிந்த மத குருமார், மத ஒற்றுமை மற்றும் இனங்களுக்கு இடையிலான ஐக்கியத்தை கட்டியெழுப்ப ஆளுநர் முன்னேடுக்கும் செயற்பாடுகளுக்கு வாழ்த்துக்களை தெரிவித்தனர். இந்த செயற்பாடுகளுக்கு தங்களின் பூரண ஒத்துழைப்பை வழங்குவார்கள் எனவும் தெரிவித்தனர்.

# நீர்வேலியில் ஆசிரியர் வீட்டில் தங்கச் சங்கிலி, பணம் அபேஸ்




(நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் நீர்வேலியிலுள்ள ஆசிரியரொருவரின் வீட்டினுள் சென்ற கொள்ளையர்கள் தங்கச் சங்கிலி, பணம் என்பவற்றை அபகரித்துச் சென்றுள்ளனர்.

நேற்று அதிகாலை வீட்டில் இருந்தவர்கள் உறங்கிக் கொண்டிருந்த போது வீட்டினுள் புகுந்த இனம் தெரியாதோர் உறங்கிக் கொண்டிருந்த ஆசிரியரொருவரின் தங்கச் சங்கிலியை அறுத்தமையுடன் ஒரு தொகை பணத்தையும் சூறையாடிச் சென்றுள்ளனர்.

கொள்ளைச் சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்ட நிலையில் பொலிஸார் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

வீட்டில் கணவன் – மனைவி இருவரும் ஆசிரியர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.



# கோப்பாய் தேசியக் கல்வியியற் கல்லூரியின் பிரதான மண்டபன் சரஸ்வதி கலையரங்கானது

## பெயர் சூட்டும் நிகழ்ச்சி சிறப்புற நடந்தது











# வித்தியா கொலை வழக்கின் மேன்முறையீடு 22ஆம் திகதி உயர் நீதிமன்றில் விசாரணை

(ந.லோகதயாளன்)

புங்குடுதீவு மாணவி வித்தியா கொலை வழக்கு எதிர்வரும் 22ஆம் திகதி உயர் நீதிமன்றில் மூவரடங்கிய நீதியரசர்கள் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் படவுள்ளது.

2015 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் – புங்குடுதீவு பகுதியில் சிவலோகநாதன் வித்தியா என்ற மாணவி கூட்டுப் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டமை தொடர்பில் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளவர்களின் மேன்முறையீடுகளை 22 ஆம் திகதி விசாரணைக்கு எடுக்க உயர்நீதிமன்றம் திகதியிட்டுள்ளது.

இந்த மேன்முறையீட்டு மனுக்கள் நீதியரசர்களான ப்ரீத்தி பத்மன் சூரசேன, அச்சல வெங்கப்புலி மற்றும் ஷிரான் குணரத்ன ஆகிய மூவரடங்கிய உயர் நீதிமன்ற நீதியரசர்கள் ஆயம் முன்னிலையில் நேற்று அழைக்கப்பட்டன.

அதன்போது, இந்த வழக்கு தொடர்பான சிங்கள மொழிபெயர்ப்பு பிரதிகளை சட்டமா அதிபரிடம் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்குமாறு மனுதாரர்களுக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதோடு இந்த மேன்முறையீட்டு மனுகளை எதிர்வரும் 22ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்வதற்கும் நீதியரசர்கள் ஆயம் தீர்மானித்துள்ளது.

# மருத்துவ ஊழியர்கள் நேற்று தொழிற்சங்க நடவடிக்கை

நிறைவுகாண் மருத்துவ ஊழியர்கள் நேற்று தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

35 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்குமாறு கோரி இந்தத் தொழிற்சங்க நடவடிக்கையை அவர்கள் முன்னெடுத்துள்ளனர்.

இந்தத்தொ ழிற்சங்க நடவடிக்கையினால் வைத்தியாலைக்கு வருகை தந்த நோயாளிகள் சிரமங்களை எதிர்நோக்கினர்.

அரச வைத்தியசாலைகளின் இரசாயன ஆய்வுக்கூட ஊழியர்கள், மருந்தாளர்கள், கதிரியக்கத் தொழில் வல்லுநர்கள் இந்தத் தொழிற்சங்க நடவடிக்கையில் இணைந்தனர்.

தொழிற்சங்க நடவடிக்கையினால் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் கதிரியக்க சேவைகள், மருந்து விநியோகம், ஆய்வுக்கூட சேவைகள் உள்ளிட்ட சேவைகள் முன்னெடுக்கப்படவில்லை.

எனினும், இந்தத் தொழிற்சங்க நடவடிக்கையினால் நோயாளர்களுக்கு ஏற்படும் சிரமங்களை கருத்திற்கொண்டு நீரிழிவு வைத்தியசாலை, புற்றுநோய் வைத்தியசாலை, மகப்பேற்று வைத்தியசாலை மற்றும் சிறுவர் வைத்தியசாலைகளின் அத்தியாவசிய சேவைகள் வழமைபோன்று முன்னெடுக்கப்பட்டன என நிறைவுகாண் மருத்துவ ஊழியர்களின் கூட்டு ஒன்றியத்தின் தலைவர் ரவி குமுதேஷ் தெரிவித்துள்ளார்.

# ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபைக்கு பிரதம நிறைவேற்று அதிகாரி புதிதாக நியமனம்

National Medicines Regulatory Authority (NMRA)
Ministry of Health, Nutrition & Indigenous Medicine

தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் பிரதம நிறைவேற்று அதிகாரியாக விசேட வைத்தியர் சவின் சேமகே நியமிக்கப்பட்டுள்ளார்.

சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரனவினால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

வெற்றிடமாகக் காணப்பட்ட பதவிக்காக கோரப்பட்டிருந்த விண்ணப்பங்களில் இருந்து, சவின் சேமகே தெரிவு செய்யப்பட்டுள்ளார் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

விசேட வைத்தியர் சவின் சேமகே இதற்கு முன்னரும், தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் பிரதம நிறைவேற்று அதிகாரியாக கடமையாற்றியுள்ளார்.